80 ஆவது ஆண்டு

# அமுத விழா சிறப்பு மலர்



# வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம்

## Vaddu Moonrampanai Co-operative Credit Society Ltd.

# வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம்

# 80 ஆண்டு பூர்த்தி

1932 2016

# அமுத விழா சிறப்பு மலர்

ஆரம்பம்: 1932

பதிவு இலக்கமும் திகதியும்: J/94 - 1936-06-30

## Vaddu Moonrampanai Co-operative Credit Society Ltd.

Vaddu West, Vaddukoddai.

2017

# சமர்ப்பணம்

தொன்மை மிகு சங்கத்தை உறுவாக்க
அரும்பாடுபட்ட அறிவுசால் பெருந்தகைகள்
அன்று தொட்டு கௌரவ சேவையாற்றி
மறைந்த மாமனித நேயர்கள்
தலைவர், செயலாளர், பொருளாளர்
மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள்
கௌரவ அங்கத்தவப் பெருமக்கள்
அனைவரையும் இந்நாளில் எம்மனதில்
நிறுத்தி நினைவில் கொள்வோம்
அவர்கள் கனவு நனவானது இச்
சிறு மலரை அவர்களின் நினைவாக
சமர்ப்பணம் செய்கின்றோம்.

மலர் குழு

உ
சிவமயம்

# முகவுரை

வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம் தனது அமுத விழாவை அழகூட்டும் வகையில் சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுகின்றது. இந்த மலரானது கடந்து வந்த பாதையிலே சங்கம் கிராம மக்களுக்கு ஆற்றிய சேவைகளையும் சங்கத்தின் அமைவிடத்தையும் கடந்த காலத்தில் சங்கத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்ட தலைவர்களையும் அதன் நிர்வாககுழு உறுப்பினர்களையும் அவர்கள் ஆற்றிய சேவைகளையும் ஒரு ஆவணமாகக் கருதப்படுகின்றது.

இச் சங்கம் தனக்கென ஒரு நிலையான கட்டிடம் மற்றும் வசதிகளைக் கொண்டுள்ளது.கடந்த 80 ஆண்டுகள் கிராம மக்களுக்கான கடன்களை குறைந்த வட்டி வீதத்தில் வழங்கி அவர்களின் சிறுகைத்தொழில் முன்னேற்றத்திற்கு கைகொடுத்து உதவியது. அத்துடன் இறக்கும் அங்கத்தவர்களுக்கு மரண சகாயம் வழங்கி வருகின்றது.

இச் சங்கமானது கிராம மக்கள் அறிந்திருக்க வேண்டிய சில விடயங்களையும் இந்த மலரிலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எண்பது ஆண்டுகள் நிறைவு என்பது ஒரு வரலாற்றுத் தொடர்பானதாகும்.

மேலும் இக் கிராம மக்களின் தேவை அறிந்து அவர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஆக்கபூர்வமான சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய தேவையைக் கொண்டுள்ளதால் அங்கத்தவர்கள் சங்கத்தின் தற்போதைய நிலையை அறியவும் மேலும் சங்கத்தை நூற்றாண்டு விழாக் காண தொடர்ந்து நடத்திச் செல்லவும் வேண்டிய பொறுப்பு உள்ளதையும் எடுத்துக் காட்டுவதாக இந்த அமுதவிழா சிறப்பு மலர் காணப்படுகிறது. எனவே சகல அங்கத்தவர்களும் இணையப்பெற்று மேலும் இச் சங்கம் தொடர்ந்து சேவையாற்ற உந்துசக்தியாக இருக்க வேண்டும் என இவ் அமுவிழா மலர் செய்தியாக மலர்கிறது.

**ந. சபாரத்தினசிங்கி**
அதிபர்,
யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

உ
சிவமயம்

# ஆசியுரை

## வட்டுக்கோட்டை மூன்றாம்பனை வைரவர் ஐக்கிய நாணய சங்கம்

மனிதர்களாகப் பிறந்த அனைவரும் நல்ல நிலைமையாக வாழ்வதற்குத் தற்காலத்தில் மிக முக்கியமான விடயம் என்னவெனில் நாடு, ஊர், கிராமம் போன்றவற்றில் இருப்பது பொதுச்சங்கங்கள் மக்களால் உருவாக்கப்பட்டு அதில் அனைவரும் அங்கத்தவர்களாகச் சேர்ந்து, அரச வங்கிகளில் பணம் சேர்ப்பது, கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வது போன்று கிராமங்களிலும் ஐக்கியநாணய சங்கங்கள் ஆரம்பித்து, அதில் மிகவும் சுலபமான முறையில் பணம் சேர்த்துப் பலவிதமான வசதிகளையெல்லாம் பெற்று வாழ்வதற்கு மிக முக்கியமான உதவியாக இருக்கிறது. இதில் விவசாய உதவி, பண உதவி போன்ற உதவிகள் யாவும் எழிதில் பெற்றுக்கொள்ள முடியும். எனவே ஐக்கிய நாணய சங்கத்தை முன்னேற்றுவது அங்கத்தவர்களாகிய அனைவரினதும் ஊக்கத்தின் மூலம்தான் உண்டு. எனவே இந்த வட்டுக்கோட்டை மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கத்தை முன்னேற்றி வைப்பது இக்கிராம மக்களுடைய ஊக்கத்திற்கும், சங்க வளர்ச்சிக்கும் வைரவ பெருமானுடைய அருளாசி கிடைக்கும் என அருளாசி கூறிக்கொண்டு இப்புத்தகம் வெளிக்கொண்டுவர எனது ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.


வட்டு மூன்றாம்பனை வைரவர் ஆலய
பிரதம சிவாச்சாரியார்

**சிவஸ்ரீ க. சி. ஸ்ரீகோபாலக்குருக்கள்**

அராலி மத்தி

உ
சிவமயம்



# யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவரின் ஆசிச்செய்தி

யாழ். மா.சி.க.கூ.ச. சமாசத்தின் சங்கானைப் பிராந்திய சபையில் வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கமும் ஒன்றாகும். இச்சங்கத்தின் செயற்பாடுகளைக் காட்டும் முகமாக தனது பவள விழாவையொட்டி வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கூட்டுறவுக் கொள்கைகளைத் தமது செயற்பாட்டில் முழுமையாகக் கடைப்பிடித்து வந்த சங்கங்கள் ஐக்கிய நாணய சங்கங்களேயாகும். இந்தவகையில் இச்சங்கமானது 1936ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுத் தனது சேவையினை அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்திற்கு முழுமையாகப் பங்களிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. அதாவது அவர்களுக்குத் தேவையான கடன் வசதிகளை வழங்கி, அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவித்தல், கூட்டுறவாளர்களைக் கௌரவித்தல் போன்ற சேவைகளை செய்துவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இச்சங்கமானது தனக்கெனக் காணி கட்டடம் ஒன்றினையும் அமைத்துத் தன் கிராமம் சார்ந்த மக்களுக்குச் சேவையாற்றிச் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.. மேலும் இச்சங்கமானது நூற்றாண்டு விழாக்களைச் சிறப்பாக நடாத்தி கூட்டுறவு வங்கியாக எதிர்காலத்தில் மிளிர எல்லாம்வல்ல மூன்றாம்பனை வைரவர் அருள்பாலிக்க வேண்டி வாழ்த்தி வரவேற்கின்றேன்.

**திரு. செ. இலகுநாதன்**
*தலைவர்,*
*யாழ். மா.சி.ச.கூ.ச. சமாசம்*

உ
சிவமயம்

# யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்

# சங்கானைப் பிராந்திய வெளிக்கள அலுவலரின் வாழ்த்துச் செய்தி

யாழ். மா.சி.க.கூ.ச. சமாசத்தின் சங்கானைப் பிராந்திய சபையின் வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கமும் ஒன்றாகும். இச்சங்கத்தின் செயற்பாடுகளைக் காட்டும். முகமாக தனது பவள விழாவையொட்டி வெளியிடப்படும் மலருக்கான வாழ்த்துச் செய்தி.

1936ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுத் அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான கடன் வசதிகளை வழங்குவதுடன் அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவித்தில், கூட்டுறவாளர்களைக் கௌரவித்தல் போன்ற சேவைகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இச்சங்கமானது தனக்கெனக் காணி கட்டடம் ஒன்றினையும் அமைத்துத் தன் கிராமம் சார்ந்த மக்களுக்குச் சேவையாற்றிச் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.. மேலும் இச்சங்கமானது சங்கானைப் பிராந்திய சபையில் ஓர் முன் உதாரணமாக சிறப்பாக செயலாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இச்சங்கமானது நூற்றாண்டு காணும்போது ஓர் கூட்டுறவு வங்கியாக எதிர்காலத்தில் மிளிர எல்லாம்வல்ல மூன்றாம்பனை வைரவர் அருள்பாலிக்க வேண்டி வாழ்த்தி வரவேற்கின்றேன்.

**திருமதி. கௌ. கடம்பநாதன்**

*வெளிக்கள அலுவலர்*

*சங்கானை பிராந்திய சபை*



# விடாமுயற்சி வெற்றியளிக்க மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றேன்

வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கத்தின் 80ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு மலர் ஒன்றினை வெளியிடுவதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். 1936ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்டதிலிருந்து இன்று வரையில் கூட்டுறவுக் கொள்கைகளிற்கு அமைவாக அங்கத்தவர்களின் சமூக, பொருளாதார, விழுமியங்களை நிறைவுசெய்வதற்கு நேர்த்தியான சேவையினை வழங்கி முன்னோடியாகத் திகழ்கின்றமை வரவேற்கப்படவேண்டிய விடயமாகும்.

ஒவ்வொரு நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்பும் சரியான குறிக்கோள், நேர்த்தியான உழைப்பு, விடாமுயற்சி என்பவற்றை முறையே ஒழுங்குபடுத்தும் போதுதான் அந்த அமைப்பு தனது இலக்கினை அடைகின்றது. அந்த வகையில் தங்களின் சங்கமும் வெற்றியடைந்த சங்கமாக இணைந்து கொள்கின்றது.

அங்கத்தவர்களின் தேவைகள், அவை நிறைவேற்றப்படும் தன்மை என்பவற்றை ஒருங்கே கொண்டுள்ள இச்சங்கத்தின் செயற்பாடுகளை வழிநடத்துகின்ற காலத்துக்குக் காலம் பதவிகளில் உள்ள நிர்வாக சபையும் இவ் அபரீதமான முன்னேற்றத்திற்குப் பெரும்பங்காற்றியுள்ளது.

தொடர்ந்தும் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து அங்கத்தவர்களுக்கான சேவைகளை விஸ்தரித்து வழங்குவதற்கு முயற்சிகள் செய்யவேண்டும். காலத்துக்குக் காலம் அங்கத்தவர்கள் எதிர்கொள்கின்ற குறைபாடுகளை அறிந்துகொள்வதன் மூலமாக அவற்றை நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

இன்றைய தினத்தில் 80ஆவது ஆண்டினை முன்னிட்டு இந்நூல் வெளியீட்டிற்கு ஆசியுரை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். எனது சேவைக்காலத்தில் சங்கத்தின் வளர்ச்சிகண்டு பெருமிதமடைகின்றேன்.

நன்றி

**பொ. மோகன்**
*கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்*



# பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

வலி.மேற்கு பிரதேசத்தில் வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம் தனது சேவையில் இன்று எண்பதாவது அகவையைப் பூர்த்தி செய்துள்ளமை எமக்கு மட்டற்ற மகிழ்வைத் தருகின்றது. வட்டுக்கோட்டைப் பிரதேசத்தின் கிராம வளர்ச்சிக்கும் மக்களின் நன்மைக்காகவும் ஐக்கியம், புரிந்துணர்வு, நாணயம் எனும் உயரிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முகிழ்த்த இச்சங்கம் தனது சமூக சேவையிலும் தான் வரித்துக்கொண்ட நோக்கிலும் நிறைவுடன் தொடர்ந்தும் சிறப்புடன் செயற்பட்டு வருவது பாராட்டத்தக்கது.

இச்சங்கத்தூடாக அங்கத்தவர்களுக்கான சேமிப்புத்திட்டங்கள், பள்ளிச் சிறார்களுக்கான சேமிப்புத்திட்டங்கள் போன்ற சேமிப்புத்திட்டங்களையும் சேமத்துக்கடன், குறுகியகால கடன் போன்ற பல கடன் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். மேலும், இச்சங்கத்தினர் பிரதேசத்தில் வாழ்கின்ற மூத்தோரைப் பேணுதல், கௌரவித்தல் நிகழ்வுகளையும் அங்கத்தவர்களின் பிள்ளைகள் பரீட்சைகளில் உயர் சித்திகளைப் பெறுகின்ற போது அவர்களுக்கான கௌரவிப்புக்களை நடாத்துதல், பிரதேசத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்காகக் கட்டட வசதிகளை வழங்கல் போன்ற பல்வேறு பிரதேசத்தின் நலநோன்பு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவை யாவும் பிரதேசத்தின் நிலையானதும் நிறைவானதுமான அபிவிருத்திக்குப் பெருந்துணை புரிகின்ற செயற்பாடுகளாகவே அமைகின்றன.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் சங்கத்தின் பவள விழாவின் நிறைவு நிகழ்வும் மலர் வெளியீடும் இவர்களால் மேற்கொள்ளப்பட்டு இருந்தமை போன்று இன்று அதன் எண்பதாவது அகவையில் அமுதவிழாக் காணும் தருணத்தில் தம் செயற்பாடுகளுடன் மட்டும் நின்றுவிடாது அவற்றையெல்லாம் ஆவணப்படுத்தி மலராக வெளியிடும் நன்முயற்சி மெச்சத்தக்கது. இவ்வரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அத்தனை உள்ளங்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

**அ. சோதிநாதன்**
*பிரதேச செயலர்*
*வலி-மேற்கு - சங்கானை*



# இலங்கை வங்கி முகாமையாளரின் வாழ்த்துரை

காலம் காலமாக யாழ் மாவட்டம் சேமிப்பில் முன்னோடியாக காணப்பட்டு வருகிறது. அந்த வகையில் வட்டு மூன்றாம் பனை ஐக்கிய நாணய சங்கமானது ஒரு பழம் பெரும் சங்கமாக பதிவு செய்யப்பட்டு சட்டரீதியாக சமூக பொருளாதார கலை கலாச்சார கல்வி மேம்பாட்டிலும் சேமிப்பு கடன் திட்டங்களிலும் மற்றும் சமூக ஊக்குவிப்புக்களிலும் ஈடுபட்டு வருகின்ற இந்த அமைப்பானது தனது 80வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுகின்ற நேரத்தில் அவர்களது சேவை, குறிக்கோள்களிலும் இன்று போல் என்றும் சிறப்புற்று நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கு பலம் மிக்க அமைப்பாக மேலும் மேலும் வளர வேண்டுமென இலங்கை வங்கி வட்டுக்கோட்டை கிளையின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**வாழ்க பல்லாண்டு வாழிய வாழியவே**

**திரு. வே. புவனேந்திரராஜா**
*முகாமையாளர்*
*இலங்கை வங்கி வட்டுக்கோட்டை*

உ
சிவமயம்

# 80$^{வது}$ ஆண்டு நிறைவுகாணும் ஐக்கிய நாணய சங்கத்திற்கு சி.க.கூ. சங்கங்களின் சமாசம் சங்கானைப் பிராந்திய சபைத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

அங்கத்தவர்களிடையே ஐக்கியம், பரஸ்பரம், சிக்கனம் போன்ற நற்பண்புகளை வளர்ப்பதில் கிராமிய மட்ட சங்கங்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றது. சங்கத்தின் ஊடாகச் சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்தல், ஒழுங்கமைப்பான கடன் வழங்கல், தவணை தப்பாத கடன் அறவீட்டு முறைமை, தாங்களே முன்வந்து ஜனனாயக முறையில் அமைத்த நிர்வாகத்தை தெரிவுசெய்து நிர்வகிக்கும் ஆற்றல், கணக்கு வைப்பு முறைமை அமைந்துகொள்ளல், மாதாந்த கணக்கினை அங்கத்தவர்கட்கு வெளிப்படுத்தல், சங்க அபிவிருத்தியில் நிர்வாகம் கலந்தாலோசித்து தீர்மானிப்பது மட்டுமன்றி, பொதுச்சபையில் அங்கீகாரம் பெறுவதோடு கூட்டுறவுச்சட்ட விதிமுறைகட்கு அமைவாக கூட்டுறவு ஆணையாளரிடம் சட்டவலுவுள்ளதாக்குவதற்கு அங்கீகாரம் பெறும் நடைமுறைகளையும் கொண்டுள்ளது. இவை கிராமிய மட்ட பொருளாதார வளர்ச்சிக்கு வலுச்சேர்க்கின்றன. மேலும் கிராமத்திலுள்ள வளங்களுக்கு ஏற்ப நடைமுறை ஒழுங்கினை மேற்கொள்ளக்கூடிய நடைமுறை விதியினை உருவாக்கல் போன்றன இவ் ஐக்கிய நாணய சங்கத்தின் சிறப்பம்சம் ஆகும்.

இந்த வகையில், 80 ஆண்டினைப் பூர்த்தி செய்து அமுதவிழா காணும் வட்டு மூன்றாம்பனை ஐக்கியநாணய சங்கம் 80 ஆண்டுகளாக பல்வேறு ஏற்றத்தாழ்வுகளை முகம் கொடுத்து சிறப்பாகச் சேவையாற்றி வருவது, பாராட்டத்தக்கதொன்றாகும். எதிர்காலத்தில் நூற்றாண்டு விழாவையும், தொடர்ந்து பல்வேறு ஆண்டுவிழாக்களையும் கண்டு சிறப்பாக அங்கத்தவர்கட்கும் கிராமத்திற்கும் சேவையாற்றி உயர்வடைய எல்லாம்வல்ல இறையருள் கிடைக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**"வாழ்க வளமுடன்"**

**வை. கைலைநாதன்**
தலைவர்
சங்கானைப் பிராந்திய சபை
ஓய்வுநிலை மாவட்ட கூட்டுறவு
அபிவிருத்தி உத்தியோகத்தர்

உ
சிவமயம்

# சங்கானை மக்கள் வங்கி

# முகாமையாளரின்

# வாழ்த்துச் செய்தி

வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம் தனது எண்பதாவது ஆண்டு அமுத விழாவின் பொருட்டு வெளியிடப்படும் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

வட்டுக்கோட்டைப் பிரதேச மக்களின் சமூக, பொருளாதார, கலை, கலாசார, கல்வி மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு இயங்கிவரும் இச்சங்கமானது எதிர்காலத்தில் தனது சேவையை மேலும் விரிவுபடுத்தி, வங்கியுடனான தொடர்புகளையும் பலப்படுத்தி, பல்சேவைகளை இப்பிரதேச மக்களுக்கு இன்னும் புரிவதற்கு அமுதவிழா நாளிலே வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச்சங்கத்தை வளர்க்க அயராது பாடுபட்ட அங்கத்தவர்களுக்கும் தற்பொழுது நிர்வாகத்தில் இருந்து அதன் வளர்ச்சிக்கு பாடுபடும் அங்கத்தவர்களுக்கும் எமது வாழ்த்துக்களைத்தெரிவிப்பதோடு அவர்களுடைய பணி சிறக்க எல்லம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

**வாழ்க பல்லாண்டு**

**வளர்க அதன் பணிகள்**

**முகாமையாளர்**
**மக்கள் வங்கி, சங்கானை.**



# சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் ஒன்றுமே இல்லை.

வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கத்தின் 80வது ஆண்டு பூத்தியாகி அமுதவிழா கொண்டாடும் இச்சங்கத்தின் தலைவர் என்ற ரீதியில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். எமது முன்னவர்களால் 1932ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1936ம் ஆண்டு யூன் மாதம் 30ம் திகதியன்று கூட்டுறவுத் திணைக்களத்தினால் ஓர் கூட்டுறவு அமைப்பாக "மூன்றாம் பனை கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)" பதிவு செய்யப்பட்டது.

வரையறுக்கப்பட்டது சங்கம் என்பதால் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 125 வரை மட்டுமே என மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால், அங்கத்தவர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் போது ஐக்கியம், நாணயம், புரிந்துணர்வு என்ற அடிப்படையில் சங்கத்தின் தொழிற்பாட்டுப் பரப்பு எல்லைக்குள் வதிபவர்கள் சேர்க்கப்பட்டு வந்துள்ளனர். இவ்வாறான அங்கத்தவர்களைச் சேர்ப்பதில் பல்வேறு பிரமாணங்கள், கட்டுப்பாடுகளைப் பேணிவந்துள்ளனர்.

எனது இளம் பராயத்திலிருந்தே இச்சங்கத்தின் உறுப்புரிமை பெற்று கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு உபவிதிகளையும் நன்கு கற்றுத் தேறியதுடன் அதன்வழி இயங்கிவந்த பல்வேறு கூட்டுறவு சமாசங்களுடனும் சேர்ந்து இயங்கி எனது அனுபவத்தை வளர்த்துக்கொண்டேன். யாழ்மாவட்ட கூட்டுறவு மேற்பார்வை சபையில் வலி-மேற்குப் பகுதியிலிருந்து உறுப்பினராக 1976ஆம் ஆண்டு சேவையாற்ற எனக்குக் கிடைத்த வாய்ப்பு அக்காலத்திலே இச்சங்கத்திற்கு இருந்த நன்மதிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

இச்சங்கத்துடன் எனக்கிருந்த தொடர்பு 40 வருடங்களுக்கு மேலானது என்பதால் சங்கத்தின் அமுதவிழா வெளியீட்டில் ஆசிச்செய்தியை வழங்குவதில் மூத்த அங்கத்தவர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சங்கமானது அமுதவிழாக் காணும் போது கொள்வனவு செய்திருந்த காணியில் இன்று சகல வசதிகளுடனும் கூடிய மணிமண்டபத்துடன் காட்சியளிக்கின்றது. அலுவலகத்துடன் கூடிய மண்டபம் கட்டுமான வேலைகள் 1980–2005ஆம் ஆண்டு வரையில் கட்டிமுடிக்கப்பட்டுப் பின்னர் படிப்படியாக மின்சாரம், மலசலகூடம், கிணறு, சுற்றுமதில் என மேலும் பெறுமதி சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறான வளர்ச்சிக் காலத்தில் சங்கத்திற்குத் தலைமை வகித்த முன்னைய தலைவர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களது அயராத முயற்சியே பிரதான காரணம் என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது. கட்டிடம் அமைக்கும் காலத்தில் கட்டிடப் பொருட்களை வழங்கி உதவிய அக்காலப்பகுதியில் (2005) இந்துகலாசார அமைச்சராகப் பதவி வகித்த அமரர் மாண்புமிகு திரு. தி. மகேஸ்வரன் அவர்களை இவ்வேளையில் நினைவில் கொள்கின்றேன். அங்கத்தவர்களின் உதவியுடன் 2013ஆம் ஆண்டு கிணறு கட்டிமுடிக்கப்பட்டது. தொடர்ந்து வடமாகாண முதலமைச்சர், நீதியரசர் மாண்புமிகு C.V. விக்னேஸ்வரன் M.P.C. அவர்களின் உதவியுடன் 2014ம் ஆண்டு மலசலகூடம் அமைக்கப்பட்டது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஈ. சரவணபவன்

M.P. அவர்களின் 2016ஆம் வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டில் சுற்றுமதிலும் அமைக்கப்பட்டுள்ளது. இவை அண்மைக்காலத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி வேலைகளாகும். இதில் சில அங்கத்தவர்களின் பங்களிப்பை மறப்பதற்கில்லை.

கடந்த 5 ஆண்டு காலத்தில் ஏனைய நிதி வழங்கும் வங்கிகள் சேமிப்புக் கணக்கிற்குரிய வட்டியில் குறைப்புச் செய்திருந்தபோதும் இச்சங்கமானது அங்கத்தவரின் சேமிப்பு வட்டி, கடன்வட்டி ஆகியவற்றில் ஸ்திர நிலையை பேணி வந்துள்ளமை சங்கத்தின் நிதி முகாமைத்துவத்தில் சிறப்பான செயற்பாடாக யாழ்மாவட்ட கூட்டுறவுச் சமாசத்திடம் பாராட்டுப் பெற்றுள்ளது.

சங்கம் பற்றிய சிலபல செய்திகள் இங்கு தவறவிடப்பட்டிருந்தால் அன்புடன் மன்னித்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். "ஒற்றுமையே பலம்" "கூட்டுறவே நாட்டுயர்வு" "சிக்கனமே சிறந்த செல்வம்" என்னும் கூட்டுறவின் மகுட வாக்கியத்தைப் பற்றி சங்கத்தின் சிறப்பையும் பேசிக்கொண்டே போகலாம். சங்கத்தின் சிறப்பையும், மூன்றாம்பனை பிள்ளையார் சமேத வைரவப் பெருமானின் அருளாலும், துணையாலும் இச்சங்கம் மேலும் மேலும் வளரவேண்டும் என வாழ்த்தி வணங்கி அமுதவிழா மலருக்கான எனது வாழ்த்துச் செய்தியை நிறைவுசெய்கின்றேன்.

நன்றி
வணக்கம்

**வே. கணேசரத்தினம்**
கௌரவ தலைவர்



உ

சிவமயம்

# பொருளாளரின் ஆசிச்செய்தி


மூன்றாம்பனை ஐக்கியநாணய சங்கம் (வரையறுக்கப்பட்டது) "Moonrampanai Co-opetrative Society Limited" என்ற பெயரில் யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்கங்களின் உதவிப் பதிவாளர் அவர்களினால் 30.06.1936ம் திகதியில் பதிவுசெய்யப்பட்ட சங்கத்திற்குப் பதிவுச் சான்றிதழின் பிரகாரம் ஆயுள் 80 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளது. சங்கத்தின் தொடக்கம் 1932ம் ஆண்டாக இருந்தபோதும் அரச அங்கீகாரம் பெற்ற நிதிநிறுவனமாக பதிவுசெய்யப்பட்ட ஆண்டிலேயே உத்தியோகபூர்வமாக "பவளவிழா" கொண்டாட்டம் நிகழ்வதையிட்டு நாம் அனைவரும் பெருமையடைகின்றோம்.

இச்சங்கமானது மிகவும் வலுமிக்க நிலையில் இருந்துகொண்டு பவளவிழா கொண்டாடுகின்றது என்றால் அதற்குக் காரணமானவர்கள் ஆரம்பம் முதல் இன்றுவரை சங்கத்தின் வளர்ச்சிக்காகச் சேவையாற்றிய நிர்வாக சபையின் தலைவர்கள் உட்பட உறுப்பினர்களின் நல்லெண்ணமும் பரந்த மனப்பான்மையும் தன்னலமற்ற சேவையும் அங்கத்தவர்களின் ஒத்துழைப்பும் காரணமாகும். நான் இச்சங்கத்தில் 35 ஆண்டுகளாக அங்கத்தவராக இருந்தபோதும் கடந்த 5 ஆண்டுகள் மிக நெருங்கிய வகையில் தலைவர், பொருளாளர் ஆகிய பதவிகளை வகித்து வருகின்றேன். கடந்த 25 வருடகால உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலத்தில் சங்கத்தினை வழிநடத்திய தலைவர்கள் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களை அங்கத்தவர்களாகிய நாம் எல்லோரும் இலகுவில் மறந்துவிட முடியாது. இக்காலப்பகுதியில் இதுபோன்ற பல சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது நிதி வளத்தை இழந்து முறிந்துபோயுள்ளன. ஆனால் எமது சங்கம் சொந்தக் கட்டிடத்தையும் தனது நிதி இருப்புக்களை வங்கியில் பாதுகாத்து வைத்து வந்ததுடன் தற்போது தனது முழு இயலளவில் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கி, இலாபம் ஈட்டி வருகின்றது என்றால் அன்றிலிருந்து இன்றுவரை நிர்வாகசபையில் தொடர்ச்சியாகப் பணியாற்றி வந்த தற்போதய தலைவரின் அனுபவம் மிக்க வழிகாட்டலேயாகும்.

எமது சங்கத்தின் இளம் உறுப்பினர்கள் நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்க முன்வரவேண்டும் என இந்நேரத்தில் கேட்டுக்கொள்வதுடன் சங்கத்திற்கு எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

"தம்பப்பனை"
வட்டு-தெற்கு

த. சர்வானந்தா
பொருளாளர்



நெறியாளர்குழு உறுப்பினர்கள் 2016 - 2017 வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்க முன்றலில்
வலமிருந்து இடம்:- **திரு ப. ஸ்ரீதரன்** (குழு உறுப்பினர்) **திரு த. சிவகுமாரன்** (கௌரவ செயலாளர்) **திரு வி. லம்போதரன்** (கௌரவ உப-தலைவர்)
**திரு வே. கணேசரத்தினம்** (கௌரவ தலைவர்) **திரு க. சர்வானந்தா** (கௌரவ பொருளாளர்)
**திரு மு. ஜெகநாதன்** (குழு உறுப்பினர்) **திரு ப. தர்சன்** (குழு உறுப்பினர்)

உ

சிவமயம்



# நல்வாழ்த்து உரை

வட்டுக்கோட்டையில் வாழ்ந்த கல்விச் சான்றோராகிய எம் முன்னோர்களால் 1934ல் கருவில் உருவாகி 1936 இல் J/94 வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கமாகப் பதிவுபெற்று இந்த (21ம்) நூற்றாண்டின் ஆரம்பத்தில் சங்கக் கட்டடம் உருவாகி, அதனுடன் கிணறு, குளியலறை, மலசலகூடம், சுற்றுமதில் எல்லாம் இதுவரை இயங்கிய சங்க நிர்வாகங்களினதும், சங்க அங்கத்தவர்களினதும் நலன்விரும்பிகளினதும் அயராத முயற்சியினாலும், சேவையினாலும் எழில்பெற்று இன்று அகவை 80 இல் தழைத்தோங்கி மிளிர்கின்ற சங்கத்தை, மேலும் சங்கத்தின் எதிர்கால தலைமுறையினரால் சீரும் சிறப்பும் பெற்று, ஐக்கியமும் நாணயமுமாக இயங்கி, சிறந்த சங்கங்களில் ஒன்றாக ஒளிவீச வேண்டுமெனவும், சங்கத்தின் 80வது மலர் வெளியீட்டில் மட்டற்ற மகிழ்வுடன் மனமார வாழ்த்துகிறேன்.

மேலும் சங்கம் வருங்காலத் தலைமுறையினரால் முக்கனிச் சோலைகளாலும் பயன்தரும் மரங்களாலும் அழகுறவும் எங்கும் தன்புகழ் பரப்பி நல்லொளி வீசி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகாலம் நீடித்து நிலைத்து வளர்ச்சியுற வேண்டும்.

சங்கம் உருவாகிய காலம் முதல் இன்றுவரை சங்கத்தை வளர்த்த சகல நெறியாளுகைக் குழுவினர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் சங்கச் செயலாளர் என்ற முறையில் நன்றிகள் பல கூறி எதிர்காலத் தலைமுறையினரால் சங்கம் சகல வளங்களும் பெற்று, வளர்ச்சியுற்று நீண்ட, முடிவிலா ஆயுள்பெற எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**நன்றி**

**திரு. தற்பரானந்தம் சிவகுமாரன்**

*செயலாளர்*

*வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம்*



உ

சிவமயம்

# திரு. கோ. மகாலிங்கம் அவர்களது

# ஆசியுரை

எல்லாம்வல்ல மூன்றாம்பனை வைரவர் சமேத பிள்ளையார், சுவாமிகளை வணங்கிக்கொண்டு, எனது வாழ்நாளில் நான் கண்ட விவசாய மக்களின் தோழனாகத் திகழ்ந்து வரும் மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம் இன்று 80 ஆண்டுகளை கடந்து எம் மக்களுக்குச் சேவையாற்றி வருவதையிட்டு என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது, இச்சங்கத்தின் வளர்ச்சிப் பாதையில் எனது அரசாங்க சேவைக்காலத்தின் இறுதியிலும் ஓய்வின் பின்னரான காலப்பகுதியிலும் எனது பங்களிப்பை தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர் என்ற பல பதவிகளை வகித்து தற்போதைய தலைவர் திரு. வே.கணேசரத்தினம் மற்றும் பொருளாளர் திரு. த.சர்வானந்தா ஆகியோர் வரை இணைந்து 2016ஆம் ஆண்டுவரை என்னாலான ஆக்கபூர்வமான சேவையை வழங்கியுள்ளேன்.

எனது சுகவீனமான இக்காலப்பகுதியில் சங்கத்தின் முன்னேற்றகரமான முன்னெடுப்புகளை (initiative) அவதானித்துக் கொண்டு வருகின்றேன். இச்சங்கம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடி தொடர்ந்தும் ஓர் எமது பகுதி மக்களின் மனதில் நல்ல பெயருடன் இயங்கும் நிதி நிறுவனமாக திகழவேண்டும் என எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து சங்கத்திற்கு எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கோ. மகாலிங்கம்**

ஓய்வுநிலை உள்ளூராட்சிமன்ற செயலாளர்,

வலி-தென்மேற்கு பி.ச. மற்றும் காரைநகர் பி.ச.

கனகரட்ணம் வீதி,

வட்டுக்கோட்டை.

உ

சிவமயம்

# மக்கள் சேவையில் நிலைத்து நிற்க வாழ்த்துகின்றோம்.

வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாயண சங்கத்தின் அமுதவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கும் வாய்ப்பை பேறாகக் கருதுகின்றேன்.

மனிதனும் அவனுடைய வாழ்வின் தன்மைகளும் நாளுக்கு நாள் துரித வளர்ச்சி காணும் மாறுபட்ட உலகில் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். மாற்றம் ஒன்றே நிலையானது என்று பேசப்படுகின்றது. இந்த உலகில் ஒரு அமைப்பு நீண்டு நிலைத்து இருப்பது என்பது ஒரு வெற்றியின் அடையாளமாகவே கருதப்படும்.

வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம் 1936இல் தோற்றம் பெற்று எட்டுத் தசாப்தங்களாகத் தனது அங்கத்தவருக்குச் சேவை செய்துவரும் சமூக நிறுவனமாகும். இந்த எண்பது ஆண்டு காலத்தில் எத்தனை சமூக பொருளாதார கலாசார மாற்றங்களை எதிர்கொண்டு நிலைத்து நிற்கின்றது என்பது மகிழ்வைத் தருகின்றது.

"கிராமிய சமூக பொருளாதார கலாச்சார மேம்பாட்டிற்கு உழைக்கவல்ல ஒரு அமைப்பு கூட்டுறவு" என்பதை நிறுவுவதற்கு ஏற்றவகையில் செயற்படும் வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கத்தின் அங்கத்தவர்களையும் நிர்வாகிகளையும் பாராட்டுவதோடு, சங்கம் பல நூற்றாண்டு விழாக்களைக் கண்டு மக்கள் சேவையில் நிலைத்து நிற்க இறையருளுக்குப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

நன்றி,

**திருமதி. வேதவல்லி செல்வரத்தினம்** M. A.
செயலாளர்
யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை

## வட்டு மூன்றாம் பனை ஐக்கிய நாணய சங்கம் வருடாந்த கணக்காய்வு அறிக்கை
## கணக்காய்வுக்காலம் 01.05.2015 - 30.04.2016

# 30.04.2016ல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டப் பகிர் கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| சமாச சந்தா | 100.00 | கி. வங்கி வைப்பு வட்டி (2491) | 159.59 |
| பொருளாளர் உதவிப்படி | 12000.00 | கி. வங்கி வைப்பு வட்டி (6002) | 0.00. |
| காகிதாதி | 2430.00 | மக்கள் வங்கி சேமிப்பு வட்டி | 69.44 |
| தபால் | 3105.00 | மக்கள் வங்கி நி. வைப்பு வட்டி. | 0.00 |
| பொங்கல் | 7380.00 | இலங்கைவங்கி வட்டி | 688.76 |
| வளவு சீர் செய்தது | 13545.00 | அங்கத்தவர் கடன் வட்டி | 228637.38 |
| வளவு சீர் படலை செய்தது | 12580.00 | சமாச சேமவட்டி | 1041.00 |
| அன்பளிப்பு சிறுவர் சேமம் | 500.00 | அபராதம் | 31955.06 |
| கிணறு இறைத்தல் செலவு | 2200.00 | பிரவேசம் | 60.00 |
| பிராந்தியசபை சந்தா | 100.00 | கலண்டர் | 2730.00 |
| கூட்டுறவுச்சபைச் சந்தா | 125.00 | பாஸ்புத்தகம் | 250.00 |
| அச்சக கூலி | 535.00 | கதிரை வாடகை | 1000.00 |
| கூட்டுறவு தின அன்பளிப்பு | 1000.00 | நானாவிதம் | 800.00 |
| மின்கட்டணம் | 2550.00 | | |
| ப.நோ.கூ.ச.கிளை வைப்பு வட்டி | 2031.11 | | |
| மகளிர் குழுத்திட்ட வைப்பு வட்டி | 201.00 | | |
| அங்கத்தவர் சேமவட்டி | 167347.18 | | |
| அங்கத்தவர் அந்திய சேம வட்டி | 8062.51 | | |
| சிறுவர் சேமிப்பு வட்டி | 663.05 | | |
| கட்டடப் பெறுமானத்தேய்வு | 13347.22 | | |
| கிணறு பெறுமானத்தேய்வு | 5610.15 | | |
| பொதுக்கூட்ட அழைப்பு | 1300.00 | | |
| கட்டட விண்ணப்பம் | 292.50 | | |
| கட்டட பரிசீலனைக் கட்டணம் | 339.00 | | |
| கலண்டர் | 2900.00 | | |
| **தேறிய இலாபம்** | **7147.51** | | |
| | **267391.23** | | **267391.23** |

| | | | |
|---|---|---|---|
| | | தேறிய இலாபம் | 7147.51 |
| கூட்டுறவு நிதி | 714.75 | | |
| சட்டப்படி அடக்கப்பணம் | 1786.88 | | |
| மீதி இலாபம் | 4645.88 | | |
| | **7147.51** | | 7147.51 |

**வே. கணேசரத்தினம்**
தலைவர்

**த. சிவகுமாரன்**
செயலாளர்

**த. சர்வானந்தா**
பொருளாளர்

# வருடாந்தக் கணக்காய்வு அறிக்கை

## கணக்காய்வுக் காலம் 01-05-2015 – 30-04-2016

## 30-04-2014 இல் உள்ளவாறான ஐந்தொகை

| பொறுப்புக்கள் | 30.04.2016 | சொத்துக்கள் | 30.04.2016 |
|---|---|---|---|
| அங்கத்தவர் பங்கு | 12650.00 | தளபாடம் | 1.00 |
| சட்டப்படி அடக்கப்பணம் | 112247.68 | காணி | 4000.00 |
| மீதி இலாபம் | 30120.75 | கிணறு | 100982.70 |
| நிலையான சொத்து விற்பனை ஒதுக்கம் | 4000.00 | கட்டடம் | 361421.98 |
| நன்கொடை | 99600.00 | அலுமாரி | 1.00 |
| பொதுநல நிதி | 11004.36 | மின் உபகரணம் | 1.00 |
| கட்டட நிதி | 155683.45 | பிளாஸ்டிக் கதிரை | 1.00 |
| ப.நோ.கூ.ச.கிளை வைப்பு | 35882.96 | சமாசப் பங்கு | 1000.00 |
| மகளிர் குழுத்திட்ட வைப்பு | 3551.05 | முதலீடு | 202.00 |
| அந்திய சேமம் | 143187.64 | கி. வங்கி வைப்பு (2491) | 4149.39 |
| அங்கத்தவர் சேமிப்பு | 2549885.09 | கி. வங்கி வைப்பு (6002) | 1690.49 |
| சிறுவர் சேமிப்பு | 11713.92 | மக்கள் வங்கி நிலையான வைப்பு | 0.00 |
| கட்டட நிதிக் கடன் | 84500.00 | இலங்கைவங்கி வைப்பு | 149597.79 |
| கிணற்றுநிதிக் கடன் | 59500.00 | மக்கள் வங்கி சேமம் | 1496.81 |
| கல்வி சமூக மேம்பாட்டு நிதி | 15000.00 | இலங்கைவங்கி நிலையான வைப்பு | 0.00 |
| கூட்டுறவு நிதி | 38242.74 | அங்கத்தவர் கடன் | 2819385.26 |
| அன்பளிப்பு | 108800.00 | சமாச சேமம் | 15162.58 |
| | | மீதி நட்டம் | 0.00 |
| | | கையிருப்பு | 16476.64 |
| | **3475569.64** | | **3475569.64** |

**வே. கணேசரத்தினம்**
தலைவர்

**த. சிவகுமாரன்**
செயலாளர்

**த. சர்வானந்தா**
பொருளாளர்

# வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம்

**வருடாந்த கணக்காய்வு அறிக்கை கணக்காய்வுக் காலம் 01-05-2015 – 30-04-2016**

**30-04-2016இல் அங்கத்தவர் பங்கு**

| தொடர் இல | அங். இல | பெயர் |
|---|---|---|
| 1 | 255 | பொ. வடிவேலு |
| 2 | 259 | சி. நடராசா |
| 3 | 270 | அ. சரஸ்வதி |
| 4 | 273 | சு. இராசகாரி |
| 5 | 276 | சு. நாகரத்தினம் |
| 6 | 277 | ந. நாகேஸ்வரி |
| 7 | 286 | ந. சண்முகராசா |
| 8 | 287 | வி. பத்மநாதன் |
| 9 | 288 | வே. கணேசரத்தினம் |
| 10 | 289 | வை. குணரத்தினம் |
| 11 | 291 | கி. முருகதாசன் |
| 12 | 292 | த. சிவகுமாரன் |
| 13 | 295 | வே. சுப்பிரமணியம் |
| 14 | 299 | வே. தில்லையம்பலம் |
| 15 | 301 | க. சிவானந்தம் |
| 16 | 302 | வா. செல்வராணி |
| 17 | 306 | ந. யோகராசா |
| 18 | 307 | க. வீரசிங்கம் |
| 19 | 311 | த. சர்வானந்தா |
| 20 | 312 | அ. சரஸ்வதிதேவி |
| 21 | 314 | வே. செல்வராசா |
| 22 | 318 | சு. சரவணமுத்து |
| 23 | 322 | மு. கிருஷ்ணமூர்த்தி |
| 24 | 324 | அ. ஜெயக்குமார் |
| 25 | 328 | ந. சிவகல்யாணி |
| 26 | 332 | மு. இந்திராணி |
| 27 | 334 | ஆ. விமலாதேவி |
| 28 | 336 | இ. சுலோஜனா |
| 29 | 340 | சிறி. நகுலாம்பிகை |
| 30 | 342 | கு. நாகரத்தினம்மா |
| 31 | 345 | இ. இராஜேஸ்வரி |
| 32 | 346 | ச. கனகாம்பிகை |
| 33 | 347 | இ. இராஜேஸ்வரி |
| 34 | 348 | இ. சந்திராதேவி |
| 35 | 352 | ச. இராசலட்சுமி |
| 36 | 354 | க. அம்பிகாவதி |
| 37 | 355 | இ. பரமேஸ்வரி |
| 38 | 356 | க. திருச்செல்வம் |
| 39 | 357 | தி. அன்னலட்சுமி |
| 40 | 359 | சு. லோகநாதன் |
| 41 | 360 | லோ. சறோசா |
| 42 | 365 | க. சின்னாச்சிப்பிள்ளை |
| 43 | 366 | ஜெ. கலைவாணி |
| 44 | 367 | வீ. சரஸ்வதி |
| 45 | 368 | க. ஜெயதாஸ் |
| 46 | 371 | த. பூலோகநாதன் |
| 47 | 372 | பூ. யோகலட்சுமி |

| தொடர் இல | அங். இல | பெயர் |
|---|---|---|
| 48 | 373 | நா. மோகனராசா |
| 49 | 374 | சிறி. கலாநிதி |
| 50 | 377 | சி. புஸ்பவதி |
| 51 | 378 | ச. சற்குணராசா |
| 52 | 380 | க. மகேஸ்வரிதேவி |
| 53 | 381 | மா. கணேசலிங்கம் |
| 54 | 382 | கா. சிறிஸ்கந்தராசா |
| 55 | 384 | த. சீவரத்தினம் |
| 56 | 385 | ந. இராமச்சந்திரன் |
| 57 | 387 | அ. சிவகுமார் |
| 58 | 389 | கு. பரமகல்யாணி |
| 59 | 390 | ச. வசந்தா |
| 60 | 391 | சு. விக்னேஸ்வரன் |
| 61 | 393 | அ. கயிலாயபதி |
| 62 | 394 | மு. ஜெயநாதன் |
| 63 | 396 | க. சுப்பிரமணியம் |
| 64 | 397 | வே. சிவஞானச்செல்வன் |
| 65 | 398 | சோ. மகாலிங்கம் |
| 66 | 402 | அ. சாந்தினி |
| 67 | 403 | ச. சுகிர்தலட்சுமி |
| 68 | 407 | சி. சிறிமோகன் |
| 69 | 408 | கி. சிறிதேவி |
| 70 | 409 | கு. ரஜிகரன் |
| 71 | 412 | ஆ. குகதாஸ் |
| 72 | 415 | வி. லம்போதரன் |
| 73 | 416 | சி. தயாளன் |
| 74 | 417 | சி. ஆனந்தராசா |
| 75 | 418 | க. சிவசுப்பிரமணியம் |
| 76 | 420 | சு. ஆறுமுகம் |
| 77 | 421 | யோ. தங்கராணி |
| 78 | 422 | ச. இரத்தினசிங்கம் |
| 79 | 423 | நா. செல்வராசா |
| 80 | 425 | ப. மனோகரன் |
| 81 | 427 | ஜெ. ரஜனி |
| 82 | 430 | சு. மதனகுமார் |
| 83 | 431 | லோ. சுகந்தன் |
| 84 | 432 | ஸ். தங்கநாயகி |
| 85 | 433 | ந. சபாரத்தினசிங்கி |
| 86 | 434 | ம. சிறிதரன் |
| 87 | 435 | ச. விஜிதா |
| 88 | 436 | த. மேனகை |
| 89 | 437 | ந. ஜெயந்திநாதன் |
| 90 | 438 | ஜெ. சுகந்தினி |
| 91 | 439 | ச. சுஜாதா |
| 92 | 440 | அ. குகராஜன் |
| 93 | 441 | ப. சிறிதரன் |
| 94 | 442 | லோ. அஜந்தன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 95 | 443 | செ. ஜெகதீபன் | 110 | 459 | ஆ. டினேஸ் |
| 96 | 444 | த. தவமணிதேவி | 111 | 460 | லோ. மோகன் |
| 97 | 445 | ச. சிறிபரன் | 112 | 461 | மோ. கேதீஸ்வரி |
| 98 | 446 | ந. பாலஸ்கந்தன் | 113 | 462 | ப. தர்சன் |
| 99 | 447 | சி. சற்குணம் | 114 | 463 | ரா. தவநிதி |
| 100 | 448 | து. குகதாசன் | 115 | 464 | சி. யசோதா |
| 101 | 449 | க. புவனேஸ்வரன் | 116 | 465 | பா. புவனேஸ்வரி |
| 102 | 451 | ந. கலாதேவி | 117 | 466 | வி. பாலச்சந்திரன் |
| 103 | 452 | லோ. தர்சினி | 118 | 467 | ஸ்ரீ. கஜன் |
| 104 | 453 | கு. விக்னேஸ்வரன் | 119 | 468 | ச. உமாகாந்தன் |
| 105 | 454 | பி. சிவகலா | 120 | 469 | ச. பிறேமானந்தன் |
| 106 | 455 | அ. சுகந்தினி | 121 | 470 | கி. சரவணபவன் |
| 107 | 456 | க. யோகேஸ்வரி | 122 | 471 | து. இராமகிருஸ்ணன் |
| 108 | 457 | வி. நளினி | 123 | 472 | இ. திலகவதி |
| 109 | 458 | சிறி. சேயோன் | 124 | 473 | செ. புஸ்பவதி |

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதமளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேன் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போ துன்னடி யின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

## மூன்றாம்பனை வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொளிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டம்மும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

## நாமவாளி

எல்லையிலே வீற்றிருக்கும் எங்கள் வைரவா
எல்லையில்லா இன்பம் தரும் எங்கள் வைரவா
தொல்லைகளை நீக்கி வைக்கும் எங்கள் வைரவா
இல்லை என்று கூறாமல் அள்ளி அருளைய்யா
பாசமுள்ள சூலத்தையே ஏந்தி நிற்கின்றாய்
நேசமுடன் நலம்அதனை வேண்டி நிற்கின்றோம்
சூலத்துடன் எங்களை காவல் செய்கின்றாய்
ஞான மெல்லாம் ஒளிவிக்கை அள்ளி அருளைய்யா
அன்புடன் அருள் கொடுக்கும் அன்பு வைரவா
தென்புடன் ஏங்கி நிற்கின்றோம் அன்பு வைரவா
இன்புடன் காவல்தரும் அன்பு வைரவா
பண்புடன் பணிகின்றோம் அன்பு வைரவா

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூனையாங் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டிட்டு
நீரில்மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

திருச்சிற்றம்பலம்

# ஆத்தி சூடி

### கடவுள் வாழ்த்து

*ஆத்தி சூடி யமர்ந்த தேவனை*
*ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே*

01. அறஞ் செய விரும்பு
02. ஆறுவது சினம்
03. இயல்வது கரவேல்
04. ஈவது விளக்கேல்
05. உடையது விளம்பேல்
06. ஊக்கமது கைவிடேல்
07. எண்ணெழுத் திகழேல்
08. ஏற்ப திகழ்ச்சி
09. ஐய மிட்டுண்
10. ஒப்புர வொழுகு
11. ஓதுவ தொழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டொன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனி நீராடு
17. ஞயம்பட வுரை
18. இடம்பட வீடெடேல்
19. இணக்கமறிந் திணங்கு
20. தந்தை தாய் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர் செய்
23. மன்று பறித் துண்ணேல்
24. இயல்பலாதன செயேல்
25. அரவ மாட்டேல்
26. இலவம் பஞ்சிற்றுயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகலாதன செயேல்
29. இளமையிற் கல்
30. அரனை மறவேல்
31. அனந்த லாடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்
34. கிழமைப்பட வாழ்
35. கீழ்மை யகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்ப தொழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட் டொழி
43. சக்கரநெறி நில்
44. சான்றோ ரினத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. சுழிக்கச் சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச்செய்
50. சேரிடமறிந்து சேர்
51. சையெனத் திரியேல்
52. சொற் சோர்வுபடேல்

53. சோம்பித் திரியேல்
54. தக்கோனெனத் திரி
55. தானமது விரும்பு
56. திருமாலுக்கு அடிமைசெய்
57. தீவினை யகற்று
58. துன்பத்துக் கிடங்கொடேல்
59. தூக்கி வினைசெய்
60. தெய்வ மிகழேல்
61. தேசத்தோ டொத்துவாழ்
62. தையல் சொற்கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி
66. நாடொப்பன செய்
67. நிலையிற் பிரியேல்
68. நீர் விளையாடேல்
69. நுண்மை நுகரேல்
70. நூல்பல கல்
71. நெற்பயிர் விளை
72. நேர்பட வொழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய வுரையேல்
75. நோய்க் கிடங்கொடேல்
76. பழிப்பன பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடுபெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
81. பூமி திருத்தியுண்
82. பெரியாரைத் துணைகொள்
83. பேதமை யகற்று
84. பையலோ டிணங்கேல்
85. பொருள்தனைப் போற்றிவாழ்
86. போர்த்தொழில் புரியேல்
87. மனந் தடுமாறேல்
88. மாற்றானுக்கு இடங்கொடேல்
89. மிகைபடச் சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனைமுகத்து நில்லேல்
92. மூர்க்கரோ டிணங்கேல்
93. மெல்லினல்லாள் தோள்சேர்
94. மேன்மக்கள் சொற்கேள்
95. மைவிழியார் மனையகல்
96. மொழிவதற மொழி
97. மோகத்தை முனி
98. வல்லமை பேசேல்
99. வாது முற்கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடுபெற நில்
102. உத்தமனாயிரு
103. ஊருடன் கூடிவாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வேண்டி வினைசெயேல்
106. வைகறைத் துயிலெழு
107. ஒன்னாரைத் தேறேல்
108. ஓரஞ் சொல்லேல்

# கொன்றை வேந்தன்

**கடவுள் வாழ்த்து**

*கொன்றை வேந்தன் செல்வ னடியிணை*
*என்று மேத்தித் தொழுவோம் யாமே*

**நூல்**

01. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
02. ஆலயந் தொழுவது சாலவு நன்று
03. இல்லறம் அல்லது நல்லறம் அன்று
04. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
05. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு
06. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
07. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
08. ஏவா மக்கள் மூவா மருந்து
09. ஐயம் புகினும் செய்வன செய்
10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
11. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு கழிவு
13. அ்.கமும் காசும் சிக்கெனத் தேடு
14. கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை
15. காவல் தானே பாவையர்க் கழகு
16. கிட்டாதாயின் வெட்டென மற
17. கீழோ ராயினுந் தாழவுரை
18. குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை
19. கூரம் பாயினும் வீரியம் பேசேல்
20. கெடுவது செய்யின் விடுவது கருமம்
21. கேட்டி லுறுதி கூட்டு முடமை
22. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
23. கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி
24. கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை
26. சந்ததிக் கழகு வந்தி செய்யாமை
27. சான்றோ ரென்கை யீன்றோர்க் கழகு
28. சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு
29. சீரைத் தேடின் ஏரைத் தேடு
30. சுற்றத்திற் கழகு சூழவிருத்தல்
31. சூதும் வாதும் வேதனை செய்யும்
32. செய்தவ மறந்தாற் கைதவ மாளும்
33. சேமம் புகினும் யாமத் துறங்கு
34. சையொத் திருந்தால் ஐயமிட் டுண்
35. சொக்க ரென்பர் அத்தம் பெறுவர்
36. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்
37. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
38. தாயிற் சிறந்ததொரு கோயிலு மில்லை
39. திரைகட லோடியும் திரவியந் தேடு
40. தீராக் கோபம் போராய் முடியும்
41. துடியாப் பேண்டிர் மடியில் நெருப்பு
42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
43. தெய்வஞ் சீறின் கைதவ மாளும்
44. தேடா தழிக்கிற் பாடா முடியும்

45. தையும் மாசியும் வையகத் துறங்கு
46. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
47. தோழ னொடும் ஏழைமை பேசேல்
48. நல்லிணக்கம் அல்ல தல்லற் படுத்தும்
49. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
50. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
51. நீரகம் பொருந்திய வூரகத் திரு
52. நுண்ணிய கருமமு மெண்ணித் துணி
53. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு
54. நெஞ்சை யொழித்தொரு வஞ்சக மில்லை
55. நேரா நோன்பு சீராகாது
56. நைபவ ரெனினு நொய்ய வுரையேல்
57. நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்
58. நோன்பென் பதுவே கொன்று தின்னாமை
59. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்
60. பாலோ டாயினும் கால மறிந்துண்
61. பிறர்மனை புகாமை அறமெனத் தகும்
62. பீரம் பேணி பாரந் தாங்கும்
63. புலையுங் கொலையுங் களவுந் தவிர்
64. பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்
65. பெற்றோர்க் கில்லை சுற்றமும் சினமும்
66. பேதமை யென்பது மாதர்க் கணிகலம்
67. பையச் சென்றால் வையந் தாங்கும்
68. பொல்லாங் கென்பவை எல்லாந் தவிர்
69. போனக மென்பது தானுழந் துண்டல்
70. மருந்தே யாயினும் விருந்தோ டுண்
71. மாரி யல்லது காரிய மில்லை
72. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
73. மீகாம னில்லா மரக்கல மோடாது
74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
75. மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்
76. மெத்தையிற் படுத்த னித்திரைக் கழகு
77. மேழிச் செல்வங் கோழை படாது
78. மைவிழி யார்தம் மனையகன் றொழுகு
79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
80. மோன மென்பது ஞான வரம்பு
81. வளவ னாயினு மளவறிந் தளித்துண்
82. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்
83. விருந்திலோர்க்கில்லை பொருந்திய ஒழுக்கம்
84. வீரன் கேண்மை கூரம் பாகும்
85. உரவோ ரென்கை யிரவா திருத்தல்
86. ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு
87. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
88. வேந்தன் சீறி னாந்துணை யில்லை
89. வையந் தோறும் தெய்வந் தொழு
90. ஒத்த விடத்தில் நித்திரை கொள்
91. ஓதாக் கில்லை யுணர்வொடும் ஒழுக்கம்

## குத்து விளக்கு ஏற்றும் முறைகளும், தத்துவங்களும்

பெண் திருமணமாகி, புகுந்தவீடு செல்லும் போது அந்த வீட்டிற்கு விளக்கு ஏற்றச் செல்வதாகப் பேசப்படுகின்றது. விளக்கின் ஐந்து முகங்களும் பெண்ணுக்கான ஐந்து இலக்கணங்களைக் குறிப்பிடுவதாகும்.

1. பொறுமை
2. சகிப்புத் தன்மை
3. விட்டுக்கொடுக்கும் தன்மை
4. சமயோசித புத்தி
5. வைராக்கியம் (நல்ல காரணங்களுக்காக)

வாழ்வு இனிமையாக நடைபெறவும் வாழ்வில் முன்னேறவும் இந்த ஐந்து குணங்களும் துணைபுரியும்.

விளக்கு தானாக அணையவிடாமல் ஒரு பூவால் ஒற்றி அணைக்க வேண்டும். வாயால் ஊதியோ, கையால் விசிறியோ அணைக்கக் கூடாது.

### விளக்கை நிறுத்துவதற்கென்று மங்கலச் சொற்கள் சில உள்ளன

**"விளக்கை அணைச்சிடு"** என்று சொல்லக்கூடாது. விளக்கைப் பெரிசுபடுத்து, விளக்கை அமர்த்து, விளக்கைக் குளிரவை போன்ற மங்கலச் சொற்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

**"விளக்கைத் தூக்கி வை"** என்று சொல்வதற்குப் பதிலாக **"விளக்கை நகர்த்தி வை"** என்று சொல்ல வேண்டும்.

வீட்டில் ஏற்றப்படும் திருவிளக்கே இலட்சுமி கடாட்சமாகும். மாலை ஆறு மணிக்கு வீட்டின் பின்கதவைச் சாத்திவிட்டு முன்கதவைத் திறந்து, வாசலில் நீர் தெளித்து, கோலமிட்டு, வீட்டில் விளக்கு ஏற்றப்படும். இதன் பொருள் முன்வாசல் வழியாக வரும் இலட்சுமி பின்வாசல் வழியாகச் சென்று விடக்கூடாது என்பதுதான். தீபம் ஏற்றிய பின், பின் கதவு திறக்கப்படலாம். அதாவது இலட்சுமி தீப ஒளியாக வீட்டில் திகழ்கிறாள்

## தீபமும் திசைகளும்

1. கிழக்கு - துன்பம் நீங்கும், பீடைகள் அகலும், சகல சம்பத்தும் உண்டாகும்.
2. மேற்கு - கிரகதோஷம், பங்காளிப்பகையை நீக்கும்.
3. வடக்கு - திரவியம், செல்வம், மங்களம் உண்டாகும்.
4. தெற்கு - தெற்குப் பார்த்துத் தீபம் ஏற்றக் கூடாது.
   (இதனால்தான் வாஸ்து சாஸ்திரத்தில் தெற்கு நோக்கி பூஜை அறை வைக்க அனுமதி இல்லை)

பூஜை நேரங்களில் மட்டும் எரிவது - சாதாரண விளக்கு
எப்பொழுதும் எரிந்து கொண்டு இருப்பது - நந்தா விளக்கு
காலை, மாலை வேகைளில் மட்டும் எரிவது - சந்தி விளக்கு



வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம்
சங்க வெளித் தோற்றம் [வடக்கு வீதி]



வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம்
முன்பக்கத் தோற்றம் 2016 – 2017

## விளக்குத் திரியின் பலன்கள்

1. தாமரைத் தண்டில் திரி போட்டால் ஜென்ம பாவங்கள் நீங்கும்.
2. வாழைத்தண்டு நூல்திரி போட்டால் குலதெய்வக் குற்றம், சாபம் நீங்கும்.
3. புது மஞ்சள் சேலை துண்டில் திரி போட்டால் தாம்பத்தியத் தகராறு நீங்கும்.
4. புது வெள்ளை வஸ்திரத்தில் பன்னீரை விட்டு உலரவைத்துத் திரி போட்டால் இலட்சுமி கடாட்சம் வந்து சேரும்
5. சிவப்பு நிறத் துணியால் திரிபோட்டால் திருமணத் தடை நீங்கும், மகப்பேறு உண்டாகும்.

## விளக்கு ஏற்ற உகந்த எண்ணெய் வகைகள்

1. **நெய்:-** சகல செல்வமும் பெருகும், நலனும் உண்டு. முருகன் சந்நிதியில் நெய் விளக்கு ஏற்றுவது மரபு.
2. **நல்லெண்ணெய்:-** நல்லெண்ணெயில் விளக்கேற்றினால் எல்லாப் பீடையும் விலகும். யமபயம் இருக்காது.
3. **ஆமணக்கு எண்ணெய், விளக்கெண்ணை:-** சகல சம்பத்தும் உண்டாகும்.
4. **ஐந்துவகை எண்ணெகள்:-** நெய், விளக்கெண்ணெயை, வேப்ப எண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காயெண்ணெய் ஆகிய ஐந்தையும் விளக்கில் ஊற்றி ஒரு மண்டலம் (45 நாட்கள்) பூஜை செய்வதால் தேவியின் அருள் பூரணமாகக் கிடைக்கும்.

**(கடலை எண்ணையில் விளக்கு ஏற்றக் கூடாது)**

## விளக்கு வகைகள்

1. **வெண்கல விளக்கு** - பாவம் போகும்.
2. **இரும்பு விளக்கு** - சனிக்கிழமை இரும்பு அகலில் தீபம் ஏற்றுவது சனீஸ்வர பகவானுக்கு பிரதீயாகும்.
3. **மண் விளக்கு** - வீரிய விருத்தியை அளிக்கும்.
4. **வெள்ளி அல்லது பஞ்சலோக விளக்குகள்** - இவை பூஜைக்கு உகந்தவை, சிறப்பைத் தரும். (தங்கம், வெள்ளி, பித்தளை, இரும்பு, செம்பு)

**(எவர் சில்வர் விளக்கு பூஜைக்கு உகந்தவை அல்ல)**

## முகங்களுக்கு உரிய பலன்கள்

1. ஒரு முகம் - மத்திய பலன்
2. இரண்டு முகம் - குடும்ப ஒற்றுமை பெருகும்.
3. மூன்று முகம் - புத்திர சுகம் தரும்.
4. ஐந்து முகம் - செல்வம் பெருகும், சகல சௌபாக்கியமும் கிடைக்கும்

**(விசேடகாலங்களில் ஐந்து முகங்களும் ஏற்றப்பட வேண்டும்)**

## விளக்கு

1. நம் அக இருள் நீக்கும்.
2. நற்சிந்தனை உண்டாகும்.
3. பலநல்ல சிந்தனை மிளிரச் செய்யும்.
4. பண்பு நலன்கள் பெருகும்.
5. பாவங்களைப் போக்கும்.

## உங்கள் இராசிகளுக்கேற்ப வீட்டு வாயிலை அமைத்துக் கொள்ளுங்கள்

**கிழக்கு வாயில்** - இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம்
**தெற்கு வாயில்** - சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம்
**மேற்கு வாயில்** - விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேடம்
**வடக்கு வாயில்** - கும்பம், மீனம், மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம்

## மனிதன் மனிதனாக வாழ 18 விஷயங்கள்

- மிகவும் மதிக்கப்படவேண்டியவர்கள் - தாய், தந்தை
- மிக நல்ல நாள் - இன்று
- மிகப் பெரிய பெறுமதி - மன்னிப்பு
- மிக வேண்டியது - பணிவு
- மிக வேண்டாதது - வெறுப்பு
- மிகப் பெரிய தேவை - நம்பிக்கை
- மிகக் கொடிய நோய் - பேராசை
- மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
- கீழ்த்தரமான விஷயம் - பொறாமை
- நம்பக் கூடாதது - வதந்தி
- ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
- செய்யக் கூடாதது - நம்பிக்கைத் துரோகம்
- விலக்க வேண்டியது - சோம்பேறித்தனம்
- உயர்வுக்கு வழி - உழைப்பு
- நழுவவிடக் கூடாதது - வாய்ப்பு
- பிரியக் கூடாதது - நட்பு
- மறக்கக் கூடாதது - நன்றி

# மனித தர்மம்

- ஏழ்மையிலும் - நேர்மை
- கோபத்திலும் - பொறுமை
- தோல்வியிலும் - விடாமுயற்சி
- தரித்திரத்திலும் - பரோபகாரம்
- துன்பத்திலும் - தைரியம்
- செல்வத்திலும் - எளிமை
- பதவியிலும - பணிவு

❖ **"பொறுமையாய் இரு ஏவரையும் வசப்படுத்திக் கொள்வாய்"**

❖ **"பகை கொள்ளாதே,நல்லதை நினை,உன் வாழ்வில் நிம்மதி காண்பாய்"**

## ஐக்கிய நாணய சங்கம்

**சங்கம் என்னும் மனிதனுக்கு**
**ஐக்கியமும் நாணயமும் இரு கண்களாகும்**
**இரு கண்களையும் பேணிப் பாதுகாத்தல் ஒவ்வொரு**
**மனிதனின் கட்டாய கடமையாகும்**

# நாம் அறிந்தவற்றில் சில.....

01. சிந்திக்காமல் பேசத் தொடங்குவது குறிபார்க்காமல் அம்பை விடுவது போன்றது - ஆர்கர் ஓயில்ட்
02. மனிதன் தோல்வியின் மூலமே மேலும் புத்திசாலி ஆகிறான். - விவோகானந்தர்
03. மன்னிக்கும் உள்ளத்தில் கடவுள் குடியிருக்கிறார் - புத்தபகவான்
04. நறுமண மலர்களோ மெதுவாக மலரும். களைகளோ வேகமாக வளரும். - ஷேக்ஸ்பியர்
05. நாம் படிக்கப் படிக்க எம்மிடமிருந்த அறியாமையை அறிந்து கொள்கிறோம். - மகாத்மாகாந்தி
06. சிறியகடன் கடனாளியை உருவாக்கும் பெரிய கடன் எதிரியை உருவாக்கும் - சைரஸ்
07. பத்தியோடு பிரார்த்தனை செய் ஆனால் சுத்தியலை பலமாக அடி - இங்கிலாந்து
08. உன் அயலானை நேசி, ஆனால் வேலியை எடுத்துவிடாதே - டென்மார்க்
09. அதிஷ்டசாலிக்கு சேவல் கூட முட்டையிடும் - கிறிஸ்
10. நல்ல மனச்சாட்சி கடவுளின் குரல் - என்தோனி

11. ஒரு நல்ல நண்பன் நூறு இனத்தார்க்குச் சமம் - பிரான்ஸ்

12. நரி உபதேசம் பண்ணத் தொடங்கினால் உன் கோழிகளைக் கவனி - **அல்போனியா**

13. அறிவு தலைககு கீறிடம். அடக்கம் காலுக்குச் செருப்பு - ஹீப்ரு

14. தேவையில்லாததை நீ வாங்கினால் தேவையானதை நீ விற்றுவிடுவாய் - **கிளாரண்டன்**

15. குந்தகம் விளைவிக்கும் போது அதைக் கவனத்தில் எடுக்காமல் இருப்பதானது, முறையுமல்ல, தர்மமுமல்ல, நீதியுமல்ல.

16. சாமியறை - பள்ளியறை, சமயலறை சொல்லியா விளங்க வேண்டும்.

17. அடம்பிடித்தால் உங்கள் வீட்டில் துன்பம் வேறு வடிவத்தில் வருவதற்கு அதிக நேரம் செல்லாது. அப்போது விளங்கும். இன,மத, மொழி, பேதம் கடந்த மானிடநேயம் அது.

18. "மகனைக் கஷ்டங்களே தெரியாமல் வளர்ப்பவர் நல்ல அப்பா.
மகனைக் கஷ்டங்களை சந்திக்கவிட்டு எதிர்கொள்ளத் துணை நிற்பவர் சிறந்த அப்பா"

**மலரின் அழகு மணம் உள்ள வரை**
**மனதின் அழகு நிம்மதி உள்ள வரை**
**தீபத்தின் அழகு ஒளி உள்ள வரை**
**தினமும் அழகு நட்பு உள்ள வரை**

உண்மை உழைப்பும் உயர்வும், வல்லமையும், இயலுமையும் சமதர்ம சமாதானமும் கிடைத்துவிட்டால், சர்வமங்கலத்தையும், ஐஸ்வரிய சிறப்புக் க்ளையும் பெருக்க உதவும். இனசனம், சுற்றாடல் உங்களை உவந்து உச்சிமோந்து நிற்பர்.

எளிமையாக நம் வாழ்வும் வடிவும், வீடு வசதியும், விட்டுக்கொடுப்பும், விவாகமும், விரயமும், விலாசமும், வேண்டுதலும், வரமும், வளமும் அமைந்து விட்டால் விதிகூட விலகிப் போகும். இதைத்தான் அருளாளர்கள் அடிக்கடி சொல்லியவண்ணம் காட்சி தருகிறார்கள்.

**"நீரின்றி அமையாது உலகு"**
**வானம் பார்த்த பூமி**
**நிலத்தடி நீர் குறைவின்றிக் கிடைக்கிறது.**
**தாம் வாழ்கின்ற பூமி இடர்களுக்கு முகங்கொடுத்து வருவதை இவர்கள் எண்ணிக்கூடப் பார்ப்பதில்லை.**

ஆட்டுக்குள்ளே மாட்டை விடலாமா? என்ற பேச்சு வழக்கு வினா - வாசகம். தப்பான முறையில் ஒன்றுக்குள் மற்றொன்றைப் புகுத்தும் ஒவ்வாத செயலைக் கண்டித்து ஒதுக்கும் போக்கை உணர்த்துவதாகும்

# பொது

**இச்சங்கத்தின் தலைமைப் பதவிகளை ஏற்க அதாவது (தலைவர், பொருளாளர், செயலாளர்) வருங்கால இளம் சமுதாயம் (இளைஞர், யுவதிகள்) முன்வரவேண்டும்.**

01. வாழையிலையில் சாப்பிடும் பொழுது வலதுகர பக்கமாக அகன்ற இலை இருக்கக் கூடியதாக இருக்கவேண்டும்.
02. உத்தரியம் போடும்போது இடது தோழில் போட்டு வலது கைப்பக்கம் முடிச்சை விட வேண்டும்.
03. அபர கிரிகைகளுக்குத்தான் பூநூல் வலதுதோழில் போட்டு இடதுகைப் பக்கம் விடுவார்கள்.
04. பெண்கள் தாவணி போடுவது போல பூசகர் பூநூல் போடுவது போல இடது பக்கமே உத்தரியம் தரிக்க வேண்டும்.
05. ஆலாத்தி எடுக்கும் பொழுது வலமாக (மணிக்கூடு ஓடும் திசையில்) எடுக்க வேண்டும்.

## சில பேச்சுவழக்கு ஊருக்குப் பொருந்தும்

01.ஈணவும் மாட்டான் முக்கவும் மாட்டான்.
02.தானும் செய்யான் தள்ளியும் நிக்கான்.
03.ஊரைக் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்.
04.ஊர் இரண்டுபட்டால் கூத்தாட்டிக்குக் கொண்டாட்டம்.
05.மணவாளனே மங்கையின் பாக்கியம்.
06.பறவைகள் விதைப்பதுமில்லை. அறுப்பதுமில்லை.
07.காசுமேலே காசு வந்தால் அட்டகாசம்.
08.ஒருவன் ஒருவன் முதலாளி உலகில் மற்றவன் தொழிலாளி.
09.ஓடம் ஒருநாள் வண்டியில் ஏறும். வண்டி ஒருநாள் ஓடத்தில் ஏறும்.
10.தலை இருக்கும் வரை தலைவலி இருக்கும். மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும்.
11.விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை.
12.காரணம் இல்லாமதல் காரியம் இல்லை.
13.தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.
14.முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
15.குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

மானுக்குக் கொம்பு அழகு
யானைக்குத் தந்தம் அழகு
கழுதை எலிசபெத் ஆகலாமா?
விளக்குமாறுக்குப் பட்டுத்துணியைக் கட்டினால் விளக்குமாறு மாறுமா?

# தத்துவம்

நதி என்றால் கரை உண்டு. பூமி என்றால் தரை உண்டு. நீர் என்றால் நுரை உண்டு. மனிதன் என்றால் குறை உண்டு.

**ஐங்குரவர்** : அரசன், உபாத்தியாயர், தாய், தந்தை, தமையன்

**ஐம்பொறி** : மெய், வாய், கண், மூக்கு, செவி

**ஐம்பூதம்** : நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்

**ஐம்பொன்** : பொன், வெள்ளி, செம்பு, இரும்பு , ஈயம்


**அறுசுவை** : கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு

**நவதானியம்** : உழுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல்லு, பயறு


**மும்மூர்த்திகள்** : விஷ்ணு, சிவன், பிம்மா

01. காசு கொடுத்து மணிக்கூட்டை வாங்கலாம் ஆனால் நேரத்தை வாங்க முடியாது.
02. காசு கொடுத்து Degree ஐ வாங்கலாம். ஆனால் படிப்பை வாங்க முடியாது.
03. காசு கொடுத்து ஒரு நாயை வாங்கலாம். ஆனால் அதன் வாலை ஆட்டுவிக்க முடியாது.
04. காற்று வந்தால் புழுதி வரும்
    புயல் வந்தால் சூறாவளி வரும்
    சூரியன் வந்தால் வெயில் வரும்
    நிலா வந்தால் வெளிச்சம் வரும்
    கடல் வந்தால் சுனாமி வரும்.

**அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை உள போல**
**இல்லாசித் தோன்றாலாகும்.** 479 அரசியல் - திருக்குறள்



சங்க வளவில் கிணறு
அங்கத்தவர்கள் சிலரின் பங்களிப்புடன் புதிதாக வெட்டப்பட்டது – 2015



வட்டு மூன்றாம்பனை வயிரவர் ஆலய கேணி
நாம் சிறுவர்களாக இருந்த காலத்தில் நீச்சலடித்து நீந்தப்பழகிய புனிதமான கேணி
(பாதுகாக்கப்பட வேண்டியது எமது கடமை)

# அறிந்து கொள்வோம்

i. பணம் மிகச் சிலரிடம் உள்ளது. பணவேட்கை ஏறக்குறைய எல்லோருடைய நெஞ்சிலும் உள்ளது. பண்பு மிகச் சிலரிடம் உள்ளது. பண்பைப் புறக்கணிக்கும் மனநிலை ஏறக்குறைய எல்லோருக்கும் உள்ளது.

ii. கல்வி, செல்வம், வீரம், உண்மையான உயர் பண்பு, விருத்திகள் நாட்டில் உலாவரும் சமூகநல ஆர்வலர்கள் இதனை விரும்புவர்.

iii. இரத்தப்பிடிப்புத் தருவது குத்தரிசிச் சோறு. அதனாலேதான் அதற்கு நாடு என்று வைத்தனர். அதில் இருக்கிற தைரியம், அமைதி, பக்குவம், பண்பு, வீரம் மற்ற எந்த அரிசியிலும் வராது. அந்தக் கஞ்சி, அந்தப் பழம்சோறு உண்டவர்களுக்குத் தெரியும்.

iv. கேட்டாலே கொடுக்கிற பூமி இது. கேட்காமல் கொடுக்கிற சாமி இது. (இத்தியடி வைரவர் கோயில், மூன்றாம்பனை வைரவர் கோயில்). மூன்றாம்பனைக்குத் தலவிருட்சம் பனை.

v. தமிழ் அவமானம் அல்ல. அடையாளம். விலகி நிற்பவன் வெல்வதில்லை. வெல்ல நினைப்பவன் விலகுவதில்லை. எனது மண், எனது கலாசாரம். உறவும் பிரிவும் இயல்பானது.

vi. a) பெண் இன்றிப் பெருமையும் இல்லை. கண் இன்றிக் காட்சியுமில்லை.

b) பெண் கிளை, பெரும் கிளை

c) பெண் மிரண்டால் வீடு கொள்ளாது.

d) பெண்ணின் கோணல் பெண்ணிலே நிமிரும்.

e) பெண்ணுக்குப் பொன்னிட்டுப் பார்.

f) பெண் பாவம் பொல்லாதது.

g) பெண்வாழ பிறந்தகம் மகிழ.

h) பெண்களின் கண்ணீர் உலகிலேயே மிக ஆற்றலுள்ள நீர் சக்தி.

i) காற்றைவிடக் கடும் வேகம் கொண்டது பெண்களின் எண்ணம்

j) தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வதே பெண்களுக்கு அழகு.

k) பெண்களின் உள்ளத்தில் இரக்கம், தியாகம், கற்பு, காதல் ஆகிய நன் முத்துக்களைக் காணலாம்.

# பதினாறு செல்வங்கள்

பதினாறு செல்வமும் பெற்று நலத்தோடு வாழவேண்டும் எனப் பெரியோர்கள் வாழ்த்துவார்கள். ஆனால் அந்தப் பதினாறு செல்வங்களும் எவை என்பது எம்மில் பலருக்குத் தெரியாமல் இருக்கின்றது. அந்தப் பதினாறு செல்வங்களும் இவையே.

(1) கலையாத கல்வி
(2) நீங்காத அறிவு
(3) நீண்ட ஆயுள்
(4) பெரும் ஆற்றல்
(5) குன்றாத இளமை
(6) நோயற்ற உடல்
(7) தாழாத புகழ்
(8) அன்பான மனைவி
(9) தவறாத சந்தானம்
(10)சலியாத மனம்
(11)கபடு இல்லாத நட்பு
(12)மாறாத வாய்மை
(13)குறையாத செல்வம்
(14)நிலையான பொறுமை
(15)மறுக்காத உதவி
(16)நீங்காத அன்பு

இந்தப் பதினாறு செல்வங்களும் வாழ்வில் கிடைக்கப்பெற்றால் வாழ்க்கையே சொர்க்கம்தான்.

# தவறாகப் பொருள் கொள்ளப்படும் பழமொழிகள்

**01. ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் செய்.**

ஆயிரம் பேரிடம் போய்ச்சொல்லி ஒரு கல்யாணம் செய்யணும்.

**02. படித்தவன் பாட்டைக் கெடுத்தான். எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்.**

படித்தவன் பாட்டைக் கொடுத்தான். எழுதினவன் ஏட்டைக் கொடுத்தான்.

**03. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்.**

இது பேரை அல்ல. வேரை (மூலிகை வேரை) ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்.

**04. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு.**

சூடு அல்ல சுவடு. சந்தையில் மாட்டை வாங்கும் போது அது பதிக்கும் தடம் சுவடு. அழுத்தமான சுவட்டைப் பதிக்கும் மாடே அதிக பலம் வாய்ந்தது. ஒரு சுவட்டைப் பார்த்தாலே மாட்டின் பலம் புலனாகும்.

**05. அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்.**

அர்ப்பணித்து வாழ்ந்து வந்தால் அர்த்த ராத்திரியிலும் கொடை கொடுப்பான். வள்ளலானவரை கஞ்சனாக மாற்றிவிட்டோம்.

காலப்போக்கில் நம் முன்னோர்கள் நம் நல்வாழ்வுக்காகச் சொல்லி வைத்ததை நாம் பிறரைக் குறைகூற உபயோகிக்கின்றோம்.

## வாழ்வில் வெற்றி பெற 10 கட்டளைகள்

01. நல்லவற்றைக் கூட்டிக் கொள்
02. தீயவற்றைக் கழித்துக் கொள்
03.அறிவைப் பெரிக்கிக் கொள்
04. நேரத்தை வகுத்துக் கொள்
05. இன்ப துன்பங்களைச் சமாளித்துக் கொள்
06. வளர்பிறை போல் அறிவை வகுத்துக் கொள்
07. செலவைக் குறை வரவைப் பெருக்கிக் கொள்
08. அன்பைப் பெருக்கி ஆணவத்தைக் குறைத்துக் கொள்
09. நல்லவருக்கு இனிமையாக இருந்து கொள்
10. பிறரை நம்பி வாழும் வாழ்வு இணையற்றது

## பணத்தால் சாதிக்க முடியாதது

01. பணத்தால் படுக்கையை வாங்கலாம் உறக்கத்தை வாங்க முடியாது.
02. புத்தகத்தை வாங்கலாம் அறிவை வாங்கமுடியாது
03. உணவை வாங்கலாம் பசியை வாங்கமுடியாது
04. பகட்டை வாங்கலாம் பண்பாட்டை வாங்கமுடியாது
05. கேளிக்கையை வாங்கலாம் மகிழ்ச்சியை வாங்க முடியாது
06. ஆயுதங்களை வாங்கலாம் வீரத்தை வாங்க முடியாது
07. வேலைக்காரர்களை வாங்கலாம் சேவை மனப்பான்மையை வாங்க முடியாது

## சிந்திக்க சிரிக்க சில துளிகள்

01. கடமைகள் நம்முடையவை நிகழ்வுகள் கடவுமுடையவை
02. மனம் மலையைக் கூட பெயர்க்கும் சக்தியுடையது
03. வேகமாக முடிவெடுப்பதை விட விவேகமாக முடிவு செய்
04. நம்பிக்கையுடையவர் ஒவ்வொரு குழப்பத்திலும் ஒரு நல்ல வழியைக் காண்கிறார்
05. மௌனமாக இருக்கத் தெரியாவதனுக்கு நன்றாகப் பேசவும் தெரியாது
06. வாதாடும் போது நிதானத்தைக் கடைப்பிடி தவறை நியாயமாக்கிவிடும் உண்மையை அவமரியாதைஆக்கிவிடும்
07. துன்பம் எல்லோரையும் திருத்திவிடும்
08. நம்முன் இல்லாதவர் பற்றி கெடுதலாகப் பேசவரும் முன்வரவேண்டாம்
09. உனக்கு நீயே நீதிபதியாக இரு உண்மையிலெ நீ மகிழ்ச்சியாய் இருப்பாய்
10. செய் நன்றி மறந்தவரை நன்றி கெட்டவர் என்று சொல்லிவிட்டால் போதும் அதற்கு மேல் சொல்லத்கு ஒள்றுமில்லை
11. ஒரு மனச்சாட்சி ஆயிரம் சாட்சிகளுக்குச் சமம்

## பாவங்கள்

01. களவு
02. திட்டமிட்டு தீங்கிழைத்தல்
03. பேராசை
04. கடும் சொல்
05. கோள் சொல்லுதல்
06. பொய் கூறுதல்
07. ஒவ்வாத பேச்சு
08. பிறர் பொருளைக் கவருதல்
09. பிறரை தவறாக எண்ணுதல்

## செல்வங்கள் பதினாறு

01. புகழ்
02. கல்வி
03. வலிமை
04. வெற்றி
05. நன்மக்கள்
06. பொன்
07. நெல்
08. நுகர்ச்சி
09. நல்வாழ்வு
10. அறிவு
11. அழகு
12. பொறுமை
13. இளமை
14. துணிவு
15. நோயின்மை
16. நீண்ட ஆயுள்

## உலகப்பெருந் தவறுகள்

01. உழைக்காமல் ஈட்டிய செல்வம்
02. மனச்சாட்சி இல்லாத இன்பம்
03. பண்பு இல்லாத அறிவு
04. நல்லொழுக்கம் இல்லாத வாணிபம்
05. மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்
06. தியாகம் இல்லாத வணக்கம்
07. அடிப்படைக் கொள்ளையில்லாத அரசியல்

## உறவுகள் மேம்பட

01. நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்
02. அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டு இருப்பதை விடுங்கள்
03. எந்த விசயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காகக் கையாளுங்கள் விட்டுக் கொடுங்கள்
04. சில நேரங்களில் சில சம்பவங்களைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும் உன்று உணருங்கள்
05. நீங்கள் சொன்னதே சரி செய்ததே சரி என்று வாதாடாதீர்கள்
06. குறுகிய மனப்பான்மையை விட்டெறியுங்கள்
07. உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையம் விடுங்கள்
08. மற்றவர்களை விட உங்களை எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்
09. அளவுக்கு அதிகமாய் தேவைக்கு அதிகமாய் ஆசைப்படாதீர்கள்
10. கேள்விப் படுகின்ற எல்லா விடையங்களையும் நம்பிவிடாதீர்கள்

## பொன்னான வார்த்தைகள்

01. கவனமற்ற ஒரு வார்த்தை கலகத்தை மூட்டலாம்
02. இரக்கமற்ற ஒரு வார்த்தை அடித்து நொருக்கலாம்
03. கனிவுள்ள ஒரு வார்த்தை இனிமையைப் பரக்கலாம்
04. மகிழ்ச்சியான ஒரு வார்த்தை இறுக்கும் நீங்கக் இதைமூட்டலாம்
05. அன்புள்ள ஒரு வார்த்தை ஆரோக்கியமளித்து வலுவூட்டலாம்

# உங்கள் சேமிப்புக்கும் சிக்கன வாழ்வுக்குமான அறிவுறுத்தல்கள் சில.....

01. உழைப்பைவிட குறைவாகச் செலவு செய்வேன்
02. மேலதிக சம்பாத்தியத்திற்கான முறையை மேற்கொள்வேன்
03. சேமிப்பைப் பலப்படுத்துவதற்கான வரவு செலவு திட்டமொன்றை அமைப்பேன்
04. மின்சாரப் பட்டியலைக் குறைத்துக் கொள்வதற்கு பாடுபடுவேன்
05. நீர் விநியோகப் பட்டியலைக் குறைத்துக் கொள்ளப் பாடுபடுவேன்
06. கடன் அட்டையைப் (Credit Card) பாவனைப்படுத்தமாட்டேன்
07. கடன் அட்டையை உபயோகப்படுத்துவேன் எனினும் மாத இறுதியில் எல்லாப் பணத்தையும் செலுத்துவேன். நிலுவை வைக்கமாட்டேன்
08. முடிந்த வரை செலவைக் கட்டுப்படுத்துவேன்
09. உபயோகமற்ற பொருட்களை கொள்வனவு செய்யமாட்டேன்
10. அவசியமற்ற பொருட்களைக் கொள்வனவு செய்யமாட்டேன்
11. தொலைபேசிக் கட்டணத்தை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்வேன்
12. பொருட்கள் கொள்வனவு செற்வதற்கு முன்னர்அதன் விலை குறையும் வரை பொறுத்திருப்பேன்
13. பொருட்களின் விலைகள் குறைந்ததினால் அவைகளைக் கொள்வனவு செய்யமாட்டேன்
14. தரக்குறைவான பொருட்களைக் கொள்வனவு செய்யமாட்டேன்
15. மேலதிக வருமானங்கள் அனைத்தையும் சேமிப்பேன்
16. வீட்டுத் தோட்டத்தில் காய்கறி பயிர் செய்து பாவனைக்கு எடுத்துக் கொள்வேன்
17. வீட்டில் இரண்டு கோழிகள் வளர்ப்பேன்
18. எனது சேமிப்பைப் பற்றி எனக்கு நானே நன்றி தெரிவிப்பேன்
19. எப்பொழுதும் எனது மூலதனத்தைப்பற்றி மகிழ்ச்சியடைவேன்
20. கடைச் சாப்பாட்டை விரும்பமாட்டேன்
21. சேமித்த தொகையில் கூடுதலான பலனைப் பெற முதலீடு செய்வேன்
22. வட்டியைப் பற்றி அறியாமல் வைப்புச் செய்ய மாட்டேன்
23. வட்டியைப் பற்றி அறியாது கடன் எடுக்க மாட்டேன்
24. குறைந்த வட்டிக்கு கடன் எடுப்பேன்
25. வாரத்திற்கு குறைந்தது 200.00 ரூபாவாவது சேமிப்பேன்
26. ஒவ்வொரு வாரமும் 10% தில் சேமிப்பை அதிகரிப்பேன்
27. காசை செலவழிப்பதற்கான நேரம் போதாத முறையில் வேலைகளை அதிகரித்துக் கொள்வேன்
28. காசை செலவழிக்காத முறையிலான பொழுது போக்குகளில் ஈடுபடுவேன்
29. பணம் உழைப்பதற்கான பொழுதுபோக்குகளில் ஈடுபடுவேன்
30. புகை பிடிக்க மாட்டேன்
31. சூதாட்டத்தை மேற்கொள்ளமாட்டேன்
32. லொத்தர் சீட்டுக்களை எடுக்கமாட்டேன்

33. உடம்புக்கு ஒவ்வாத உணவை அருந்தமாட்டேன்
34. வைத்தியரைச் சந்திப்பதைக் குறைத்துக் கொள்வதற்காக காலையில் உடற்பயிற்சி மேற்கொள்வேன்
35. சேமித்த பணத்தை செலவுசெய்வதற்கு முன்னர்பல முறை யோசிப்பேன்
36. சேமிப்பையும் செலவையும் பற்றி பல முறை யோசிப்பேன்
37. பணத்தைச் செலவழிப்பது எவ்வாறு என மிகுந்த கவனமுடன் இருப்பேன்
38. மாதாந்த சம்பாத்தியத்தை அதிகரிப்பேன்
39. நுகர்வின்போது அயலவர்களுடன் போட்டியிடமாட்டேன்
40. சிறிய தூரத்தை நடந்து செல்வேன். (கி.மீ 2க்கும் குறைவாக)
41. சிறிய தூரத்தை சைக்கிளில் செல்வேன் (2-10 கி. மீ.)
42. அதிகதூரத்தை குறைந்த செலவில் மோட்டார் சைக்கிளில் செல்வேன் (கி. மீ 11-25 இடையில்)
43. அதிக தூரத்தை பஸ்ஸில் செல்வேன் (25 கி.மீ மேல்)
44. சுகாதாரக் காப்புறுதி ஒன்றைப் பெற்றுக் கொள்வேன்
45. தண்ணீர் குழாயை திறந்து விட்டு பல் துலக்கமாட்டேன்
46. முடிந்தளவு குளித்து சுத்தமாக இருப்பேன்
47. அசுத்தமான உடைகளை ஒரே தடவையில் தோய்த்து எடுப்பேன்
48. அசுத்தமான நீரை வீட்டுத் தோட்டத்திற்கு உபயோகப்படுத்துவேன்
49. குறைந்தளவு விறகடுப்பைப் பாவிப்பேன்
50. சுட வைத்த தண்ணீரை சுடு தண்ணீர் போத்தலில் ஊற்றி வைப்பேன்
51. பசளை செய்யும் பாத்திரம் ஒன்றைப் பயன்படுத்துவேன்
52. சேமிப்புப் பழக்கத்தைப் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுப்பேன்
53. சில்லறைக் காசை உண்டியலில் இடுவேன்
54. தேவையற்ற துணிமணிகளை கொள்வனவு செய்யமாட்டேன்
55. மாதாந்தம் தேவையற்ற பொருட்களை (கடுதாசி, இரும்பு) விற்றுவிடுவேன்
56. பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தவணைகளை முறையாகச் செலுத்துவேன்
57. எந்தவொரு விடையத்திற்கும் தண்டப்பணம் செலுத்தமாட்டேன்
58. முடிந்தவரை பத்திரிகைகளை கொள்வனவு செய்யாமல் வாசிப்பேன்.(ஓசியில்)
59. மாதத்திற்கு தேவையான பொருட்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்வேன்
60. காலத்திற்கேற்றவாறு காய்கறிகளைக் கொள்வனவு செய்வேன்
61. மதுபானம் (வெற்றிலை, சாராயம்) போன்றவற்றைப் பாவிக்கமாட்டேன்
62. பாடசாலைக்கு பிள்ளைகளை பஸ்ஸில் அனுப்புவேன்
63. விலைகளைப் பேசாமல் பொருட்களைக் கொள்வனவு செய்யமாட்டேன்.
64. உயர்தர வாசனைப் பொருட்களை கொள்வனவு செய்யமாட்டேன்
65. சுகாதார காப்புறுதி முறைகளைப் பயன்படுத்தி நோய்களிலிருந்து மீளுவேன்
66. வீட்டிலுள்ளவர்களுக்கு போதுமான உணவைச் சமைப்பேன்
67. வீணாக நண்பர்களுக்கு அழைப்பு விட மாட்டேன்
68. சந்தைக்குச் செல்வதற்கு முன்னர் தேவையானவற்றை எழுதிக் கொண்டு செல்வேன்
69. தண்ணீர் போத்தல்களை பாவனைப்படுத்த மாட்டேன் பதிலாக பில்ரர் பாவிப்பேன் சுடுதண்ணீர்
70. வீட்டுக்கு கட்டுப்பாடான மின்சார பல்ப்புக்களைப் பொருத்துவேன்
71. வீணாக வானொலி மற்றும் தொலைக் காட்சியை உபயோகப்படுத்தமாட்டேன்

72. துணிமணிகளை வெய்யிலில் உலர்த்துவேன்
73. பிள்ளைகளுடன் சந்தைக்குச் செல்லமாட்டேன்
74. காசு கிடைத்தவுடன் வங்கியில் அல்லது சங்கத்தில் வைப்புச் செய்வேன்
75. வீணான செலவு செய்யமாட்டேன்
76. ஏல விற்பனையில் போட்டியிடமாட்டேன்
77. வட்டியில்லாத சீட்டுக்களைப் போடமாட்டேன்
78. பொருட்கள் சீட்டுக்கள் போடமாட்டேன்
79. தேவையானவற்றிற்கு மாத்திரம் வெளியில் செல்வேன்
80. வைத்தியர் தரும் மருந்துத் துண்டுக்கு ஒரே முறையில் மருந்துகளை வாங்கமாட்டேன்
81. திட்டமிட்டு வீடுகளை அமைப்பேன்
82. மழை நீரைச் சேமித்து பாவனைக்கு எடுப்பேன்
83. அதிகாலையில் எழும்புவேன்
84. இரவு 10 மணிக்கு முன்னர் நித்திரைக்கு செல்வேன்
85. வருடத்திற்கு இரண்டு முறை மாத்திரம் உல்லாசப் பயணம் மேற்கொள்வேன்
86. முடிந்தளவு பொருட்களை திருத்திப் பயன்படுத்துவேன்
87. நாளாந்த வரவு செலவு பற்றி குடும்பத்தினருடன் கலந்துரையாடுவேன்
88. பரிசாக எனக்குக் கிடைத்த பொருட்களை எனக்கு தேவைப்படாயின் மற்றவர்களுக்கு பரிசாக அளிப்பேன்
89. கொண்டாட்டங்களின் போது மிகக்கவனமாகச் செலவு செய்வேன்
90. பிறந்தநாள் விழாவைக்கொண்டாடமாட்டேன்பதிலாக கோவிலுக்குச் செல்வேன்
91. மரண வீட்டுக்கு பெரிய அளவில் செலவு செய்ய மாட்டேன்
92. திருமண வைபவங்களை எளி முறையில் நடத்துவேன். செலவைக் கட்டுப்படுத்தி பணத்தைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பேன்
93. இயற்கை மரச் செடிகள் மூலம் அலங்கரிப்பேன் பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிக்கமாட்டேன்
94. பேப்பர் சேவையாசீட்டுக்குப் பதிலாக கைத்துடைப்பைப் பாவிப்பேன்.
95. காலத்திற்கேற்ற உணவுகளை முன்கூட்டியே பத்திரப்படுத்துவேன் (பலாக்கொட்டை, கிழங்கு வகைகள்)
96. பகல் நேரங்களில் கதவு ஜன்னல்களைத் திறந்து விட்டு மின் விளக்குகளை அணைத்துவிடுவேன்
97. குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பேன்
98. சல்லாபங்களில் ஈடுபடமாட்டேன்
99. ஆடைகள் ஒரேமுறையில் அயன் செய்து மின்சாரத்தை மட்டுப்படுத்வேன்.
100. தினமும் சேமிப்பைப் பார்த்து மகிழ்ச்சியடைவேன்.

# பூப்புனித நீராட்டுவிழா ஆராத்தி


01. கொத்து நெல்லு வேப்பிலை
02. காம்புச் சத்தகம், தேசிக்காய் (நிறைநாழி)
03. புக்கை
04. பிட்டு
05. கழி
06. பலகாரம்
07. பழம்
08. தேங்காய்
09. பூக்கள்
10. விளக்கு

**இலைச்சாற்றில் ஆரோக்கியம்**

- ❖ அறுகம்புல் சாறு - ஆரோக்கியத்தைத் தரும்
- ❖ அளநீர் சாறு - இளமையைக் கொடுக்கும்
- ❖ வாழைத்தண்டு சாறு - வயிற்றுக்கல் போக்கும்
- ❖ வல்லாரைச்சாறு - நரம்பு வலிகளைப் போக்கும்
- ❖ புதினாசாறு - விக்கல் போன்ற நோய்களை நீக்கும்
- ❖ நெல்லிக்கனி சாறு - நல்ல அழகைக் கொடுக்கும்
- ❖ துளசி சாறு - தொண்டைச்சளி, சோர்வு நீக்கும்
- ❖ முசுமுசுக்கை சாறு - மூக்கு நீர் வற்றும்
- ❖ அகத்தியிலை சாறு - அடிவயிற்று மலத்தை நீக்கும்
- ❖ கடுக்காய் சாறு - கட்டுடலைக் கொடுக்கும்
- ❖ முடக்கத்தான் சாறு - மூட்டுவலி போக்கும்
- ❖ கல்யாண முருங்கை சாறு - உடலைக் குறைக்கும்
- ❖ தூதுவளை சாறு - தும்மல், சளி எல்லாம் நீக்கும்
- ❖ ஆடாதோடை சாறு - ஆஸ்துமா தொல்லை நீக்கும்
  கரிசலாங்கண்ணி சாறு - கண்பார்வை அதிகரிக்கும



வட்டுக்கோட்டை மூன்றாம்பனை வயிரவர் கோவில்
வலது பக்கம் மடப்பள்ளி இடது பக்கம் மணிக் கோபுரம் களஞ்சிய அறை
தல விருட்சம் பனை மரங்களும் வலது பக்கம் இத்தி மரமும்
இடது பக்கம் அரச மரமும் காணப்படுகிறது



வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம்
நெறியாளர் குழு உறுப்பினர்கள் 2016 – 2017

## யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளின் தொலைபேசி இலக்கங்கள்

| | வைத்தியசாலையின் பெயர் | வைத்தியசாலையின் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 01. | ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை | 021 205 9228 |
| 02. | ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை | 021 221 1666 |
| 03. | ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி | 021 227 0661 |
| 04. | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை | 021 226 3261 |
| 05. | பிரதேச வைத்தியசாலை, கரவெட்டி | 021 226 4608 |
| 06. | பிரதேச வைத்தியசாலை, கொடிகாமம் | 021 205 0121 |
| 07. | பிரதேச வைத்தியசாலை, காரைநகர் | 021 225 1745 |
| 08. | பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி | 021 205 8047 |
| 09. | பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை | 021 226 3530 |
| 10. | பிரதேச வைத்தியசாலை, வரணி | 021 205 0804 |
| 11. | பிரதேச வைத்தியசாலை, இளவாலை | 021 221 1937 |
| 12. | பிரதேச வைத்தியசாலை, நெடுந்தீவு | 021 321 3577 |
| 13. | பிரதேச வைத்தியசாலை, மானிப்பாய் | 021 225 5960 |
| 14. | பிரதேச வைத்தியசாலை, வட்டுக்கோட்டை | 021 321 3582 |
| 15. | பிரதேச வைத்தியசாலை, மருதன்கேணி | 021 226 0505 |
| 16. | பிரதேச வைத்தியசாலை, வேலணை | 021 221 1556 |
| 17. | பிரதேச வைத்தியசாலை, அளவெட்டி | 021 224 2060 |
| 18. | பிரதேச வைத்தியசாலை, பண்டத்தரிப்பு | 021 321 3585 |
| 19. | பிரதேச வைத்தியசாலை, முல்லியான் | 021 320 3796 |
| 20. | பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் | 021 223 0070 |
| 21. | பிரதேச வைத்தியசாலை, அம்பன் | 021 320 7156 |
| 22. | பிரதேச வைத்தியசாலை, நயினாதீவு | 021 321 3583 |
| 23. | பிரதேச வைத்தியசாலை, சங்கானை | 021 225 0079 |
| 24. | பிரதேச வைத்தியசாலை, புங்குடுதீவு | 021 320 5759 |
| 25. | புற்றுநோய் பிரிவு, தெல்லிப்பழை | 021 205 9290 |
| 26. | பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ். | 021 222 5555 |
| 27. | போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் | 021 222 2261,<br>021 222 5154,<br>021 222 5155,<br>021 222 5156 |

# எமது சங்கத்தின் தலைவர்கள்

01. திரு. அ. வைத்திலிங்கம்
02. திரு. அ. சபாபதிப்பிள்ளை
03. திரு. அ. சண்முகம்
04. திரு. தா. தம்பிஐயா
05. திரு. அ. முருகேசபிள்ளை
06. திரு. மு. இராமலிங்கம்
07. திரு. மு. நவராசா
08. திரு. வி. தம்பையா
09. திரு. க. தம்பிராசா
10. திரு. வே. சுப்பிரமணியம்
11. திரு. க. கிருஷ்ணர்
12. திரு. ந. சண்முகராசா
13. திரு. கி. முருகதாசன்
14. திரு. சோ. மகாலிங்கம்
15. திரு. வே. கணேசரத்தினம்
16. திரு. த. சர்வானந்தா
17. திரு. வே. கணேசரத்தினம்

## வட்டு மூன்றாம் பனை ஐக்கிய நாணய சங்கம்
## வருடாந்த கணக்காய்வு அறிக்கை
## கணக்காய்வுக் காலம் 01.05.2015 - 30.04.2016

### 30.04.2016இல் அங்கத்தவர் பங்கு

| தொடர் இல | அங். இல | பெயர் | பங்கு |
|---|---|---|---|
| 1 | 255 | பொ. வடிவேலு | 100.00 |
| 2 | 259 | சி. நடராசா | 100.00 |
| 3 | 270 | அ. சரஸ்வதி | 100.00 |
| 4 | 273 | சு. இராசகாரி | 100.00 |
| 5 | 276 | சு. நாகரத்தினம் | 100.00 |
| 6 | 277 | ந. நாகேஸ்வரி | 100.00 |
| 7 | 286 | ந. சண்முகராசா | 100.00 |
| 8 | 287 | வி. பத்மநாதன் | 100.00 |
| 9 | 288 | வே. கணேசரத்தினம் | 100.00 |
| 10 | 289 | வை. குணரத்தினம் | 100.00 |
| 11 | 291 | கி. முருகதாசன் | 100.00 |
| 12 | 292 | த. சிவகுமாரன் | 100.00 |
| 13 | 295 | வே. சுப்பிரமணியம் | 100.00 |
| 14 | 299 | வே. தில்லையம்பலம் | 100.00 |
| 15 | 301 | க. சிவானந்தம் | 100.00 |
| 16 | 302 | வா. செல்வராணி | 100.00 |
| 17 | 306 | ந. யோகராசா | 100.00 |
| 18 | 307 | க. வீரசிங்கம் | 100.00 |
| 19 | 311 | த. சர்வானந்தா | 100.00 |
| 20 | 312 | அ. சரஸ்வதிதேவி | 100.00 |
| 21 | 314 | வே. செல்வராசா | 100.00 |
| 22 | 318 | சு. சரவணமுத்து | 100.00 |
| 23 | 322 | மு. கிருஷ்ணமூர்த்தி | 100.00 |
| 24 | 324 | அ. ஜெயக்குமார் | 100.00 |
| 25 | 328 | ந. சிவகல்யாணி | 100.00 |
| 26 | 332 | மு. இந்திராணி | 100.00 |
| 27 | 334 | ஆ. விமலாதேவி | 100.00 |
| 28 | 336 | இ. சுலோஜனா | 100.00 |
| 29 | 340 | சிறி. நகுலாம்பிகை | 100.00 |
| 30 | 342 | கு. நாகரத்தினம்மா | 100.00 |
| 31 | 345 | இ. இராஜேஸ்வரி | 100.00 |
| 32 | 346 | ச. கனகாம்பிகை | 100.00 |
| 33 | 347 | இ. இராஜேஸ்வரி | 100.00 |
| 34 | 348 | இ. சந்திராதேவி | 100.00 |
| 35 | 352 | ச. இராசலட்சுமி | 100.00 |
| 36 | 354 | க. அம்பிகாவதி | 100.00 |
| 37 | 355 | இ. பரமேஸ்வரி | 100.00 |
| 38 | 356 | க. திருச்செல்வம் | 100.00 |
| 39 | 357 | தி. அன்னலட்சுமி | 100.00 |
| 40 | 359 | சு. லோகநாதன் | 100.00 |

| | | | |
|---|---|---|---|
| 41 | 360 | லோ. சறோசா | 100.00 |
| 42 | 365 | க. சின்னாச்சிப்பிள்ளை | 100.00 |
| 43 | 366 | ஜெ. கலைவாணி | 100.00 |
| 44 | 367 | வீ. சரஸ்வதி | 100.00 |
| 45 | 368 | க. ஜெயதாஸ் | 100.00 |
| 46 | 371 | த. பூலோகநாதன் | 100.00 |
| 47 | 372 | பூ. யோகலட்சுமி | 100.00 |
| 48 | 373 | நா. மோகனராசா | 100.00 |
| 49 | 374 | சிறி. கலாநிதி | 100.00 |
| 50 | 377 | சி. புஸ்பவதி | 100.00 |
| 51 | 378 | ச. சற்குணராசா | 100.00 |
| 52 | 380 | க. மகேஸ்வரிதேவி | 100.00 |
| 53 | 381 | மா. கணேசலிங்கம் | 100.00 |
| 54 | 382 | கா. சிறிஸ்கந்தராசா | 100.00 |
| 55 | 384 | த. சீவரத்தினம் | 100.00 |
| 56 | 385 | ந. இராமச்சந்திரன் | 100.00 |
| 57 | 387 | அ. சிவகுமார் | 100.00 |
| 58 | 389 | கு. பரமகல்யாணி | 100.00 |
| 59 | 390 | ச. வசந்தா | 100.00 |
| 60 | 391 | சு. விக்னேஸ்வரன் | 100.00 |
| 61 | 393 | அ, கயிலாயபதி | 100.00 |
| 62 | 394 | மு. ஜெயநாதன் | 100.00 |
| 63 | 396 | க. சுப்பிரமணியம் | 100.00 |
| 64 | 397 | வே. சிவஞானச்செல்வன் | 100.00 |
| 65 | 398 | சோ. மகாலிங்கம் | 100.00 |
| 66 | 402 | அ. சாந்தினி | 100.00 |
| 67 | 403 | ச. சுகிர்தலட்சுமி | 100.00 |
| 68 | 407 | சி. சிறிமோகன் | 100.00 |
| 69 | 408 | கி. சிறிதேவி | 100.00 |
| 70 | 409 | கு. ரஜிகரன் | 100.00 |
| 71 | 412 | ஆ. குகதாஸ் | 100.00 |
| 72 | 415 | வி. லம்போதரன் | 100.00 |
| 73 | 416 | சி. தயாளன் | 100.00 |
| 74 | 417 | சி. ஆனந்தராசா | 100.00 |
| 75 | 418 | க. சிவசுப்பிரமணியம் | 100.00 |
| 76 | 420 | சு. ஆறுமுகம் | 100.00 |
| 77 | 421 | யோ. தங்கராணி | 100.00 |
| 78 | 422 | ச. இரத்தினசிங்கம் | 100.00 |
| 79 | 423 | நா. செல்வராசா | 100.00 |
| 80 | 425 | ப. மனோகரன் | 100.00 |
| 81 | 427 | ஜெ. ரஜனி | 100.00 |
| 82 | 430 | சு. மதனகுமார் | 100.00 |
| 83 | 431 | லோ. சுகந்தன் | 100.00 |
| 84 | 432 | ஸ். தங்கநாயகி | 100.00 |
| 85 | 433 | ந. சபாரத்தினசிங்கி | 100.00 |
| 86 | 434 | ம. சிறிதரன் | 100.00 |
| 87 | 435 | ச. விஜிதா | 100.00 |

| | | | |
|---|---|---|---|
| 88 | 436 | த. மேனகை | 100.00 |
| 89 | 437 | ந. ஜெயந்திநாதன் | 100.00 |
| 90 | 438 | ஜெ. சுகந்தினி | 100.00 |
| 91 | 439 | ச. சுஜாதா | 100.00 |
| 92 | 440 | அ. குகராஜன் | 100.00 |
| 93 | 441 | ப. சிறிதரன் | 100.00 |
| 94 | 442 | லோ. அஜந்தன் | 100.00 |
| 95 | 443 | செ. ஜெகதீபன் | 100.00 |
| 96 | 444 | த. தவமணிதேவி | 100.00 |
| 97 | 445 | ச. சிறிபரன் | 100.00 |
| 98 | 446 | ந. பாலஸ்கந்தன் | 100.00 |
| 99 | 447 | சி. சற்குணம் | 100.00 |
| 100 | 448 | து. குகதாசன் | 100.00 |
| 101 | 449 | க. புவனேஸ்வரன் | 100.00 |
| 102 | 451 | ந. கலாதேவி | 100.00 |
| 103 | 452 | லோ. தர்சினி | 100.00 |
| 104 | 453 | கு. விக்னேஸ்வரன் | 100.00 |
| 105 | 454 | பி. சிவகலா | 100.00 |
| 106 | 455 | அ. சுகந்தினி | 100.00 |
| 107 | 456 | க. யோகேஸ்வரி | 100.00 |
| 108 | 457 | வி. நளினி | 100.00 |
| 109 | 458 | சிறி. சேயோன் | 100.00 |
| 110 | 459 | ஆ. டினேஸ் | 100.00 |
| 111 | 460 | லோ. மோகன் | 100.00 |
| 112 | 461 | மோ. கேதீஸ்வரி | 100.00 |
| 113 | 462 | ப. தர்சன் | 100.00 |
| 114 | 463 | ரா. தவநிதி | 100.00 |
| 115 | 464 | சி. யசோதா | 100.00 |
| 116 | 465 | பா. புவனேஸ்வரி | 100.00 |
| 117 | 466 | வி. பாலச்சந்திரன் | 100.00 |
| 118 | 467 | ஸ்ரீ. கஜன் | 100.00 |
| 119 | 468 | ச. உமாகாந்தன் | 100.00 |
| 120 | 469 | ச. பிறேமானந்தன் | 100.00 |
| 121 | 470 | கி. சரவணபவன் | 100.00 |
| 122 | 471 | து. இராமகிருஸ்ணன் | 100.00 |
| 123 | 472 | இ. திலகவதி | 100.00 |
| 124 | 473 | செ. புஸ்பவதி | 100.00 |

# நன்றி நவில்கின்றோம்

**.எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் – உய்வில்லை**

**செய்நன்றி கொன்ற மகற்கு** என்ற வள்ளுவப்பெருந்தகையின் வாக்கிற்கமைய ஒருவர் செய்த உதவி காலத்தால் பெரியது அவ் மனிதர்களை நாம் மறவாது நன்றி கூறிக் கொள்வது கட்டாய கடமையாகும். இச்சங்கத்தின் அமுதவிழா மலருக்கு

01) ஆசியுரை வழங்கிய வட்டு மூன்றாம்பனை வைரவர் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ க. சி. ஸ்ரீகோபாலக்குருக்கள் அவர்களுக்கும்

02) வாழ்த்துச் செய்தி வழங்கிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு பொ. மோகன் அவர்களுக்கும்

03) வலிகாமம் மேற்கு பிரதேசசெயலர் திரு அ. சோதிநாதன் அவர்களுக்கும்

04) மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு செ. இலகுநாதன் அவர்களுக்கும்

05) சங்கானை பிராந்திய சபை வெளிக்கள அலுவலர் திருமதி கௌரிதேவி கடம்பநாதன் அவர்களுக்கும்

06) யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் திருமதி வேதவல்லி செல்வரத்தினம் அவர்களுக்கும்

07) வலி-மேற்கு பிராந்திய சபைத் தலைவர் திரு வை. கைலைநாதன் (ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களுக்கும்

08) 2016 – 2017 ஆண்டு நிர்வாகக் குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் அங்கத்தவர்கள் அனைவருக்கும் அவர்களின் தன்னலமற்ற சேவையை மறவாது

09) சங்கத்தின் கட்டிடம் அமைப்பதற்கும் ஏனைய வசதிகளைச் செய்துதந்துதவிய பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர், மற்றும் வட-மாகாண சபை உறுப்பினர்கள் அனைவருக்கும்

10) 80ஆண்டு காலமாக சங்க அங்கத்தவர்களாக இருந்து சங்கத்தை திறம்பட நடத்திவந்த அங்கத்தவர்கள் அனைவருக்கும்

11) உங்கள் கரங்களில் தவழும் இச் சிறப்பு மலரை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய சங்கானை திருமொழி அச்சகத்தினருக்கும்

12) மேலும் அமுதவிழா கொண்டாடுவதற்கும் சிறப்பு மலர் வெளியிடுவதற்கும் தன்னலங் கருதாது நெறிப்படுத்தி உதவிய சங்கத்தின் தலைவர் திரு வே. கணேசரத்தினம் அவர்களுக்கும்

13) மேலும் இவ் விழா தொடர்பாக நடத்துவதற்கு எம்மோடு தோள்கொடுத்து உதவிய அங்கத்தவர்கள் அனுதாபிகள் அனைவருக்கும்

**நன்றி கூருகின்றோம்**

**மலர் குழு**



வட்டு மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம்
முன்பக்கத் தோற்றம் படலையுடன் காணப்படுகிறது



முதலமைச்சரின் நன்கொடை நிதியிலிருந்து கட்டப்பட்ட *(Toilat & Bathroom)*
மலசல கூடமும் குளியலறையும்

அமுதவிழா மலருக்கு அனுசரனை

# அமுத விழா கொண்டாடும்

# வட்டு மூன்றாம்பனை
# ஐக்கிய நாணய சங்கம்

**மக்கள் சேவையில் பல்நெடுங்காலம் நிலைத்து**
**சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றோம்**


## அமுதவிழா ஆண்டு 80



மக்கள் மனதறிந்த வங்கி

# மக்கள் வங்கி

# சங்கானை.



அமுதவிழா மலருக்கு அனுசரனை

# வட்டு மூன்றாம்பனை
# ஐக்கிய நாணய சங்கம்

## 80 ஆண்டு பூர்த்தியடைந்து

## அமுத விழா கொண்டாடுவதையிட்டு
## மட்டற்ற மகிழ்வடைகின்றோம்





மக்கள் மனதில் நிலையான இடம்பிடித்த

# இலங்கை வங்கி

## வட்டுக்கோட்டை.

